ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் மாத இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டுச் சந்தா ரூ. 5] [தனி இதழ் 50 ந. பை

மலர் 33	ஜூன் 1969	இதழ் 6

நெருக்கடியைத் தீர்க்க நான்கு வழிகள்

எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்வி என்கிற திட்டம், தமிழ் நாட்டில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, 1964 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்திருக்கிறது.

அந்தத் திட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னால் தமிழகத்தில் உள்ள தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கு நான்கு வகையான வருவாய் வழிகள் அமைந்திருந்தன.

1. கட்டணச் சலுகை பெறக்கூடாத மாணவ—மாணவிகளிடம் வசூலிக்கப்பட்ட கட்டணத் தொகை.

2. *கட்டணச் சலுகை காரணமாக ஏற்பட்ட இழப்புக்கு ஈடாக அரசு அளித்துவந்த ஈட்டுத் தொகை.*

3. பதினைந்து ஆண்டுகட்கு மேலாக நடைமுறையில் இருந்த முறைப்படி அரசு வழங்கிவந்த ஆசிரிய மானியத் தொகை.

4. ஆசிரியர்களின் ஊதியம் போக மற்றபடி உள்ள வாடகை, வரி, பழுது பார்க்கும் செலவு, சில்லறைச் செலவு போன்ற ஒத்துக் கொள்ளப்பட்ட இனங்களுக்கு அரசு அளித்துவந்த மானியத் தொகை.

இந்த நால்வகை வருவாய்களைக் கொண்டு, தனியார் துறையினர், அப்போதெல்லாம், தங்கள் உயர்நிலைப் பள்ளிகளை எழிலும் ஏற்றமும் மிகுந்த முறையில் நடத்திவர முடிந்தது. அதுமட்டுமல்ல, இவ்வாறு கிடைத்த வருவாயிலிருந்து ஆண்டுதோறும் ஓரளவு தொகையை மிச்சப் படுத்தி, அவ்வாறு கிடைத்த தொகையைக் கொண்டு, சில ஆண்டு களுக்கு ஒரு முறை, பள்ளிக்கூடத்தை மேம்பாடு அடையச் செய்வதற் கான பல புதிய திட்டங்களை மேற்கொள்ள முடிந்தது. இந்த வகையில் கிடைத்த தொகையைக் கொண்டுதான் தனியார் உயர்நிலைப் பள்ளி நிர்வாகிகள் பலரால், தங்கள் பள்ளிக்கூடங்களுக்காகப் புதிய கட்டிடங் களைக் கட்ட முடிந்தது; புதிய இடங்களை விலைக்கு வாங்கி விளையாட்டுத் திடல்களை அமைக்க முடிந்தது; ஆய்வுக்கூட வசதிகள்—நூல் நிலைய வசதிகள் முதலியவற்றைப் பெருக்க முடிந்தது.

ஆனால் இலவசக் கல்வித் திட்டம் நடைமுறைக்கு வந்த 1—4—1964 முதல் நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. இப்போதெல் லாம் தனியார் துறையினரால், பள்ளிக்கூட வளர்ச்சித் திட்டம் எதையும் மேற்கொள்ள முடியவில்லை; புதிய கட்டிடம் எதையும் கட்டமுடிய வில்லை; விளையாட்டுத் திடல்கள் முதலியவற்றைப் புதிதாக வாங்கவோ, ஏற்கெனவே இருப்பனவற்றை மேம்படுத்தவோ இயலவில்லை, இத்த கைய வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள இயலவில்லை என்பது மட்டுமல்ல; நடைமுறைக்குத் தேவையான பணத்தைக்கூட முழு அளவில் பெறமுடியவில்லை.

மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கக்கூடாது என்கிற திட்டம் இப்போது நடைமுறையில் இருப்பதால், தனியார் துறையினர், தங்கள் உயர்நிலைப் பள்ளிகளை நடத்துவதற்குத் தேவைப்படுகிற தொகை முழுவதையும், அரசாங்கம் அளிக்கிற மானியம் ஒன்றிலிருந்தே ஈடுகட்ட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

தனியார் உயர்நிலைப் பள்ளி ஒவ்வொன்றிற்கும் ஆசிரியர்களின் ஊதியம் தவிர்த்த ஏனைய செலவுகளுக்காக அரசு அளிக்கும் மானியம்

மிகக் குறைவாக இருக்கிறது. ஆனால் அத்தகைய செலவுகளோ அதிக மாக இருக்கிறது.

அரசு அளிக்கிற நிர்வாக மானியத்திற்கும் இவர்கள் செய்கிற நியாய மான செலவுக்கும் இடையே இருக்கிற இடைவெளி எவ்வளவு பெரியது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள இதோ ஓர் எடுத்துக் காட்டு.

சில நாட்களுக்குமுன் சென்னை மாநகரில் சிறப்புடன் நடைபெற்ற தமிழ்நாடு தனியார் உயர்நிலைப்பள்ளி நிர்வாகிகள் கழக ஏழாவது மாநாட் டுக்குத் தலைமை தாங்கி, பண்பும் பயனும் நிறைந்த பேருரை ஒன்றை நிகழ்த்தியுள்ள திருவாளர் கே. சுந்தரம் எம். பி. அவர்கள், ஆற்றல் மிகுந்த ஒரு தொழிலதிபர் மட்டும் அல்லர்; ஆர்வம் நிறைந்த ஒரு தனியார் பள்ளி நிர்வாகியும் ஆவார். அவரால் தொடங்கி நடத்தப் படுகிற 1250 மாணவர்களைக் கொண்ட ஓர் உயர்நிலைப் பள்ளியில், ஆசிரியர்களின் ஊதியம் தவிர்த்த ஏனைய நிர்வாகச் செலவுகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு ஆகிற தொகை ரூபா பதினைந்தாயிரம். ஆனால் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு அரசாங்கத்திடமிருந்து கிடைத்த நிர்வாக மானியத் தொகையோ,

1964—65ல்	ரூ. 1685	1966—67ல்	ரூ. 3267
1965—66ல்	ரூ. 1831	1967—68ல்	ரூ. 2910

ஆகிற செலவோ ரூ. 15,000 ஆனால் கிடைக்கிற தொகையோ 1685 முதல் 3267 வரைதான்! போதுமா? நியாயமா? செலவுக்கும் வரவுக்கும் இடையே உள்ள இடைவெளியைத் தனியார் நிர்வாகிகள் எப்படித்தான் நிரப்ப முடியும்? எங்கிருந்துதான் அதற்குரிய தொகை யைத் திரட்ட இயலும்? மாணவர்களிடமிருந்து கட்டணம் திரட்டுகிற உரிமை பள்ளி நிர்வாகிகளுக்கு இருக்குமானால் சிக்கல் இல்லை. தேவை யான தொகையை அத்தகைய கட்டணத்தின் வாயிலாகத் திரட்டி விடமுடியும். ஆனால் அரசாங்க ஆணையோ, கட்டணம் வசூலிப்பதைத் தடுத்து நிறுத்திவிட்டது.

மாணவர்களிடமிருந்தும் கட்டணம் வசூலிக்கக்கூடாது—அரசாங் கமும் போதிய அளவு நிர்வாக மானியத்தைத் தராது என்றால், தனியார் பள்ளிகள் எப்படித்தான் வாழமுடியும்?

தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஏற்பட்டுள்ள பண நெருக்கடி எத்துணைப் பயங்கரமானது என்பதை எடுத்துக்காட்டுவதற்குரிய மற்

ஒரு விவரத்தையும் இங்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். சென்னை நகரத்தில் உள்ள அரசாங்க உயர்நிலைப் பள்ளி ஒன்றிற்கு, ஆசிரியர்களின் ஊதியம்—ஏனைய நிர்வாகச் செலவுகள் ஆகிய இரண்டிற்குமாகச் சேர்த்து ஆண்டு ஒன்றிற்கு அரசாங்கம் செய்கிற மொத்தச் செலவு, ரூ. 2,72,000. அந்தப் பள்ளியில் பயில்கிற மாணவர்களின் எண்ணிக்கை, 1500. ஆகவே அந்தப் பள்ளியில் ஆண்டு ஒன்றுக்கு, மாணவன் ஒவ்வொருவனுக்கும், அரசாங்கம் செய்கிற சராசரிச் செலவு, ரூ. 181 ஆகிறது.

அதே சென்னை நகரில் உள்ள டாக்டர் குருசாமி முதலியார் டி. டி. வி. உயர்நிலைப்பள்ளி என்னும் தனியார் துறைப் பள்ளி ஒன்றிற்கு, ஆண்டு ஒன்றுக்கு அரசாங்கம் அளிக்கிற மானியத் தொகை—ஆசிரிய மானியம், நிர்வாக மானியம் இரண்டுமாகச் சேர்ந்து—ரூ. 1,70,000. அந்தப் பள்ளியில் பயில்கிற மாணவர்களின் எண்ணிக்கை, 1100. ஆகவே, அந்தப் பள்ளியில் ஆண்டு ஒன்றுக்கு, மாணவன் ஒவ்வொருவனுக்கும், அரசாங்கம் செய்கிற சராசரிச் செலவு, ரூ. 155 ஆகிறது.

அரசாங்கம், தானே நடத்துகிற பள்ளியில் ஒவ்வொரு மாணவனுக்காகவும் செலவிடுகிற சராசரித் தொகை ரூ. 181 என்றால், தனியார் பள்ளியிலும் ஒவ்வொரு மாணவனுக்காக அதே அளவு செலவுதானே ஆகும்? ஆகவே, தனியார் பள்ளி நிர்வாகத்திற்கு அதே அளவு தொகையைத்தானே மானியமாகத் தரவேண்டும்? ஆனால் நடைமுறையில் தருவதோ ரூ. 155 தான்!

ஆகிற செலவு ரூ. 181. ஆனால் அரசு தருகிற மானியமோ ரூ. 155. ஆகவே அரசு அளிக்கிற மானியத்தைவிட ஒவ்வொரு மாணவனுக்காகவும் ஆகிற கூடுதல் செலவு ரூ. 26 என்பது தெளிவாகிறது.

இவ்வாறு தேவைப்படுகிற தொகையைத் தனியார் நிர்வாகிகள் எவ்வாறு திரட்டுவது—எங்கிருந்து ஈட்டுவது?

முற்றிலும் நியாயமான இக்கேள்வியை எழுப்பி, இதற்குரிய விடையையும் மிகத் தெளிவாக அளித்துள்ளது, தமிழ்நாடு தனியார் உயர்நிலைப்பள்ளி நிர்வாகிகள் கழகம்.

1. தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆகும் செலவுகள் அனைத்தையும் அரசாங்கம் ஈடுகட்டுதல்.

அல்லது

2. ஆசிரியர்களின் ஊதியத் தொகையில் பத்து சதவிகிதம் உள்ள ஒரு தொகையை நிர்வாக நடைமுறைச் செலவுக்கான மானியமாக வழங்குதல்.

அல்லது

3. ஒவ்வொரு மாணவனுக்கும் ரூ. 10 வீதம் மானியம் வழங்குதல்.

அல்லது

4. ஒவ்வொரு மாணவனிடமிருந்தும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10 வீதம் நிர்வாக நடைமுறைச் செலவுக் கட்டணமாக வசூலித்துக் கொள்ளப் பள்ளி நிர்வாகத்தினருக்கு அனுமதி அளித்தல்.

இந்த நான்கு ஏற்பாடுகளில், அரசாங்கத்திற்குப் பிடித்தமான ஏதாவது ஓர் ஏற்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவந்தால், தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கு 1964ஆம் ஆண்டு முதல் இருந்து வருகிற பணநெருக்கடி தீரும் என்பது, தமிழ்நாடு தனியார் உயர்நிலைப் பள்ளி நிர்வாகிகள் கழகத்தின் கருத்து.

இந்தக் கருத்து, முற்றிலும் நியாயமானது; தவறாமல் ஏற்கத் தக்கது; உடனடியாகப் பின்பற்றத்தக்கது.

28—10—67 அன்று, சென்னையில் உள்ள டாக்டர் குருசாமி முதலியார் டி. டி. வி. உயர்நிலைப்பள்ளியில் புதிதாகக் கட்டப்பட்ட குழந்தைவேலர் கூடத்தைத் திறந்து வைத்துப் பேசும்போது, அப்போது தமிழக முதலமைச்சராக விளங்கிய அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், ‘‘பணமுடைதீர நீங்கள் குறிப்பிட்டுள்ள நான்கு மாற்று வழிகள், உங்கள் கழக உறுப்பினர்கள் அனைவருக்கும் ஏற்புடையன என்றால், அவற்றுள் ஒன்றுக்கு விரைவில் அரசாங்க ஆணை பிறப்பிக்கிறேன்,’’ என்று உறுதி அளித்தார்கள்.

நேசத்தோடும் பாசத்தோடும் அத்தகைய உறுதியை வழங்கிய உத்தமத் தலைவர் இப்போது நம்மிடையே இல்லை. ஆனால் அந்த மாபெரும் தலைவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கும் அமைச்சரவையே இப்போதும் பீடுநடை போட்டு வருகிறது. ஆகவே பேரறிஞர் அண்ணாவின் அன்பு மொழியை அரசாங்க ஆணையாக மாற்றியமைக்க வேண்டிய இன்றியமையாத கடமை மட்டுமல்ல, உரிமையும் இன்றைய அமைச்சரவைக்கு உண்டு.

அத்தகைய ஆணையைத் தமிழக அரசு மிக விரைவில் பிறப்பித்தல் வேண்டும் என்பதே நம்முடைய பணிவான வேண்டுகோள்.

அத்தகைய ஆணை பிறக்கும் நாளே, தமிழகத் தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பொன்னாள்; அவற்றிற்கெல்லாம் ஒளிமயமான எதிர்காலம் உண்டு என்பதை உறுதிப்படுத்தும் நன்னாள்.

செய்திச் சுருள்

164 வயதான ரஷிய விவசாயி

ரஷியாவிலுள்ள அஜெர்பைஜானைச் சேர்ந்த சிராவி மிஸிலிமோவ் என்பவருக்கு 164 வயதாகிறது. அவர் ஒரு விவசாயி.

அவர் உடல் நிலை நன்றாயிருப்பதாக அவருடைய டாக்டர் கூறியதாக டாஸ் செய்தி ஸ்தாபனம் கூறியது.

அவர் வழக்கம் போலத் தம்முடைய அலுவல்களைக் கவனித்து வருகிறார். தினசரி பல மணி நேரம் திறந்த வெளியில் இருக்கிறார். பல மணி நேரம் தம்முடைய தோட்டத்தில் வேலை செய்கிறார். அவருக்கு ஜீரண சக்தியும் நன்றாயிருக்கிறது. அவருக்குப்பேரப்பிள்ளைகள் மட்டும் 193 பேர் இருக்கின்றனர்.

அஜெர்பைஜானில் வசிக்கும் நூறு வயதுக்கு மேற்பட்ட 183 பேரில் அவர் ஒருவர்.

இந்தியாவின் ஜனத்தொகை 53 கோடி

இந்தியாவின் ஜனத்தொகை 53·1 கோடி என்று யூனியன் சர்க்கார் குடும்பக் கட்டுப்பாடு இலாகா வெளியிட்டுள்ள ஒரு பிரசுரம் கூறுகிறது. 1969 மார்ச் 1-ந்தேதி இருந்த நிலவரமாகும் இது.

அதன் கணக்குப்படி மார்ச் 1-ந் தேதி இந்தியாவின் ஜனத்தொகை 53,17,12,213 பேராகும்.

வேலையில்லா விட்டால்தான் களைப்பு! இந்திரா கூறுகிறார்.

வேலையில்லா விட்டால்தான் தனக்குக் களைப்பு ஏற்படுகிறது என்று பிரதமர் இந்திரா காந்தி கூறுகிறார்.

'இவ்வளவு கடுமையாக உழைக்கிறீர்களே, உங்களுக்குக் களைப்பு ஏற்படவில்லையா?' என்று பலர் என்னைக் கேட்கிறார்கள். வேலையினால் எனக்குக் களைப்பு ஏற்பட்டதில்லை.

ஒருவர் எவ்வளவுக் கெவ்வளவு முயற்சிக்கிறாரோ அவ்வளவுக்கவ்வளவு அதிகம் செய்ய முடியும். குறைவாகச் செய்தால்தான் அலுப்பும் சலிப்பும் ஏற்படுகிறது. வேலையில் அவரவர் கொள்ளும் ஆர்வம் தான் காரணம். செய்யும் காரியத்தை அனுபவித்துச் செய்தால், எவ்வளவு நேரம் வேலை செய்தால் தான் என்ன? என்று பிரதமர் கேட்டார்.

கண்ணகி சமாதியா?

கேரளத்திலுள்ள கிராங்கனூரில் இருக்கும் தேவி கோயில் கர்ப்பக்கிரகத்திற்கு மிக அருகாமையில் எல்லாப் புறங்களிலும் சுவர்களால் மூடப்பட்ட ஒரு ரகசிய அறை இருக்கிறது. பூமிக்கு அடியிலிருந்து செல்லக்கூடிய பாதாள வழி ஒன்று அதற்கு இருக்கிறது.

அந்த ரகசிய அறை, கண்ணகியின் சமாதியாக இருக்கக்கூடும்.

என்று கொச்சி தேவஸ்தானபோர்டு வெளியிட்டுள்ள புத்தகம் ஒன்று கூறுகிறது.

மதுரையை தீக்கிரையாக்கியபின், கண்ணகி மேற்குத் தொடர்ச்சி மலை வழியாக, சேரன் செங்குட்டுவனின் தலை நகரான வஞ்சி (தற்போது கிராங்கனூர் என்று அழைக்கப்படுகிறது)க்கு அருகேயுள்ள செங்குண்ணு என்ற ஊரில் இறைவனடி சேர்ந்தார் என்று கூறப்படுகிறது. அவரது பூதவுடல் மேற்படி ரகசிய அறையில் அடக்கம்செய்யப்பட்டிருக்கலாம் என்று கூறுகிறது.

திரு. வி. டி. இந்துச்சூடன் என்பவர் இந்தப் புத்தகத்தை எழுதியுள்ளார்.

தலைமை வகித்துப்பேசிய கேரள ஹைக்கோர்ட் நீதிபதி திரு. டி. சி. ராகவன் பேசுகையில், கேரளத்திலுள்ள சிலசரித்திர பிரசித்தி பெற்ற ஆலயங்களின் வரலாறு மர்மம் நிறைந்தவை என்றும், அதை வெளிப்படுத்தினால், புராதன சரித்திரம் பற்றிய பல உண்மைகள் புலனாகும் என்றும் கூறினார்.

பொல்லாத ஆமைகள்

இலங்கையில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள நெற் களஞ்சியம் என்று வர்ணிக்கப்படும்கரைவாகுப் பள்ளம், கல்முனைவெளி, முனையவெளி, மேட்டு வட்டை ஆகிய பகுதிகளில் உள்ள பயிர்கள் யாவற்றையும் ஆமைகள் நாள்தோறும் கரும்பை வெட்டிக் குவிப்பது போல் வெட்டிக் குவிக்கின்றன. இப் பகுதிகளிலுள்ள பயிர்களுக்கு இயற்கையாக ஏற்படும் அழிவுகளை விட ஆமைகளால் ஏற்படும் அழிவு மிகவும் மோசமானதும், கட்டுப்படுத்த முடியாததுமாகும்!

இப் பகுதி விவசாயிகள் தங்களால் இயன்ற அளவு எவ்வளவோ முயற்சி செய்தும் இதைக் கட்டுப்படுத்த முடியவில்லையாம். இப் பகுதிகளில் உள்ள சில வயல்களில் பயிர்கள் சிறிதுமின்றிமுழுவதையும் ஆமைகள் உணவாக்கிக் கொண்டுள்ளன. குறிப்பாக 40, 60 நாட்களுக்கிடைப்பட்ட பயிர்களை இந்த ஆமைகள் அடியால்வெட்டி, அதற்குள்ளிருக்கும் குருத்துக்களை உணவாகக் கொள்கின்றன.

கடந்த காலங்களில் இப் பகுதிகளில் முதலைகள் அதிகமாக இருந்ததால் ஆமைகளை முதலைகள் பிடித்து உணவாக்கி வந்தன. ஆனால் தற்பொழுது இங்கு முதலைகளின் நடமாட்டம் அறவே இல்லாது போனதால் ஆமைகள் அதிகமாகிவிட்டதாலும், இந்த ஆமைகளுக்குப் போதிய அளவு வேறு உணவுகள் இல்லாததாலும் இவைகளுடைய நாட்டம் இப்பொழுது விவசாயிகளின் பக்கம் திரும்பியிருக்கிறது.

பல்லவர் துறைமுகம்

சதுரங்கப்பட்டினத்திற் கருகில் பாலாறு வங்கக் கடலில் கலக்குமிடத்தில் வடக்குக் கரையில் வாசவ சமுத்திரம் என்ற கிராமத்தில் பல்லவ மன்னர்களின் துறைமுகம் இருந்திருக்கலாமென்று முடிவு செய்வதற்குரிய தடயங்கள் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினருக்குக் கிடைத்துள்ளன

வாசவசமுத்திரம் மாமல்லபுரத்துக்குத் தெற்கில் 8 மைல் தொலை

விலுள்ளது. சதுரங்கப்பட்டினத்திலிருந்து 2 கல் தூரம்.

மண்ணால் செய்த சாக்கடைக் குழாய், சில இடுபானைகள் (சவங்களைப் புதைப்பதற்காகும்) ரோமானியகோப்பைகள்கிடைத்துள்ளன. பூம்புகார், நாகர்ஜுனகொண்ட முதலிய இடங்களில் கிடைத்தது போன்ற பெரும் செங்கற்கள் கிடைத்துள்ளன.

இந்தச் செங்கற்களின் நீளம் 15 அங்குலம் அகலம் 10 அங்குலம், உயரம் 3 அங்குலம் உள்ளது.

பாலாறு முகத்துவாரத்தருகில் மேட்டை இடித்து, சமன் செய்து நிலமாக்குவதற்காக விவசாயி ஒருவர் முயன்றார். வரலாற்றுப் புதிரை அவிழ்க்க உதவியவர் அவர் எனலாம் அவர்மேட்டில் அரும்தொல் பொருள்கள் கிடைத்ததை தாசில்தாருக்குத் தெரிவிக்க, தாசில்தார் தொல்பொருள் ஆராய்ச்சித்துறைக்கு அறிவித்தார்.

சுக்கிரனுக்கு மனிதன் போக முடியாது

ரஷிய சோதனையிலிருந்து புலனாகும் உண்மை

சுக்கிரனுக்கு மனிதன் போக முடியாது என்றே தோன்றுகிறது.

ரஷியா அனுப்பியுள்ள வீனஸ்-5, வீனஸ்-6, என்ற விண்வெளிக் கப்பல்கள் அனுப்பி வைத்த தகவல்களைப் பூர்வாங்கமாகப் பரிசீலித்ததிலிருந்து, மனிதன் அங்கு போக முடியாது எனத் தோன்றுகிறது

சுக்கிரனின் வாயு மண்டலத்தில் 250லிருந்து 400 டிகிரிவரை வெப்பநிலை இருக்கிறது. தவிர, சுக்கிரனைச் சுற்றிக் கவிந்துள்ள அடர்த்தியான மேக மூட்டத்தை சூரிய ஒளியால் கூட ஊடுருவிச் செல்ல முடியவில்லை. எனவே சுக்கிரனின் மேற்பரப்பு பற்றி டெலிவிஷன் படம் கிடைப்பது கூடச் சாத்தியமில்லையென்றே தோன்றுகிறது.

ரஷிய கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான "பிராவ்தாவில்" இன்று வெளியான ஒரு கட்டுரை இவ்வாறு கூறுகிறது. "வீனஸ்-5" "வீனஸ்-6" ஆகிய கப்பல்களை உருவாக்கிய விஞ்ஞானி ஒருவர் இந்தக் கட்டுரையை எழுதியுள்ளார்.

"எப்படிப் பார்த்தாலும் நமது குழந்தைகளோ, நமது பேரக் குழந்தைகளோ போக முடியாது: மனிதனால் எப்போதுமே அங்குப் போக முடியாது என்றுதான் தோன்றுகிறது" என்று அவர் எழுதியுள்ளார்.

இந்தச் சோதனைகளிலிருந்து ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது விண்வெளியிலுள்ள மிகத் தொலைவான கிரகங்களுக்குக்கூட பூமியிலிருந்து தானாக இயங்கக் கூடிய, நீண்டகால பயண விண்வெளிக் கப்பல்களை அனுப்ப முடியும். 3 வருஷகாலம் போகக் கூடிய விண்வெளிக் கப்பல்களை அனுப்ப முடியும் என்பதே அது.

இதுவரை கிடைத்துள்ள தகவல்களின்படி பார்த்தால், சுக்கிரனில் எவ்வகையான உயிரினமும் இருக்க முடியாது என்றே தோன்றுகிறது.

—"தினமணி"

கல்வித்துறைச் செய்திகள்

ஹையர் கிரேடு ஆசிரியர் பயிற்சி எடுபடுகிறது

தமிழக அரசு வருகிற கல்வியாண்டிலிருந்து எல்லா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் ஹையர் கிரேடு பயிற்சியை எடுத்துவிடத்தீர்மானித்திருக்கிறது. லோயர் கிரேடு பயிற்சி ஏற்கனவே எடுபட்டு விட்டது.

ஆசிரியர்களுக்குக்குறைந்தபட்சமாக செகண்டரி கிரேடு பயிற்சி வகுப்புகள் மட்டுமே இருக்கும்.

பாடப் புத்தக கார்ப்பரேஷன் 2 மாதங்களில் அமைக்கப்படும்

அரசாங்க பாடப் புத்தக கார்ப்பரேஷன் 2 மாதங்களில் அமைக்கப்படும். எஸ்.எஸ்.எல்.சி. வரை பாடப் புத்தகங்களைத் தயாரித்து வெளியிடும் பொறுப்பு இந்தக் கார்ப்பரேஷனைச் சேர்ந்தது.

இந்தக் கார்ப்பரேஷன் சுயேச்சையான ஸ்தாபனம். கல்வித்துறை நிபுணர்கள் உட்பட 10 அல்லது 12 மெம்பர்கள் இந்தக் கார்ப்பரேஷனில் இருப்பர். கல்வி மந்திரி இதன் தலைவராக இருப்பார்.

இப்போது 8-வது வகுப்பு வரை பாடப் புத்தகங்களை அரசாங்கம் வெளியிடுகிறது. பாடப் புத்தகங்களைப் பிரசுரிப்பதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு, கார்ப்பரேஷன் நாளடைவில் சொந்தத்திற்கு அச்சு இயந்திர சாதனங்களை வைத்துக் கொள்ளும்.

பொது மதிய உணவு சமையல் கூடங்கள் ஆற்காடு, செங்கை ஜில்லாக்களில் ஏற்படும்

தமிழ் நாட்டில் புதிய உணவு திட்டத்துக்காக பொதுச் சமையல் கூடங்களைக் கட்டித்தர "கேர்" ஸ்தாபனத்தின் தமிழ்நாடு கிளை தயாராக உள்ளது.

இத்திட்டத்தை சர்க்கார் ஏற்றுக் கொண்டுள்ளது என்றும், இது பல கட்டங்களில் நிறைவேற்றி வைக்கப்படும் என்றும் தமிழ்நாடு கிளை ஸ்தாபனத்தின் நிர்வாகி பி. ஜான்சன் பஞ்சாயத்து யூனியன்களுக்கு அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

வடாற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு ஜில்லாக்களில் இத்தகைய பொது சமையல் கூடங்கள் 30 ஆரம்பிக்கப்படும்.

செகண்டரி கல்வி பாடத் திட்டத்தில் மாறுதல் பற்றி யோசனை கூற நிபுணர் குழு

செகண்டரி கல்விக்கான பாடத் திட்டத்தில் மேற்கொண்டு செய்யப்பட வேண்டிய அபிவிருத்திகள்

பற்றியும் பல்வேறு அறிவுத் துறை களில் ஏற்பட்டுள்ள நவீன முன் னேற்றங்களைப் பாடத்திட்டத்தில் சேர்ப்பது பற்றியும் யோசனை களைக் கூற கல்வி நிபுணர்களடங் கிய ஒரு நிரந்தரக் கமிட்டியைத் தமிழ் நாடு அரசாங்கம் ஒரு மாதத்திற்குள் அமைக்கும். மாண வர்களிடையே ஆக்க பூர்வ சிந் தனையைத் தூண்டிவிடுவதே, இக் கமிட்டியின் நோக்கமாகும்.

கல்வி அமைச்சர் செ. மாதவன் இன்று நிருபர்களிடம் இத்தகவலை வெளியிட்டார்.

டில்லி கல்வி ஸ்தாபனங்களில் உள்ள பாடத் திட்டங்களையும் கமிட்டி ஆராயும் என்றார்.

நமது கல்வி முறை தேவைக்கு ஏற்றதா? அநுபவத் தொழிற் பயிற்சியின் அவசியம் பற்றிப் பிரதமர்

நமது சர்வகலாசாலைகள் அளிக் கும் பொதுக் கல்வியைவிட, பாலி டெக்னிக்குகளும் மற்ற தொழிற் பயிற்சிநிலையங்களும் அளித்துவரும் அனுபவ பயிற்சிதான் நாட்டுக்கு உறுதியான அஸ்திவாரம் போட்டு வருகின்றன என்று பிரதம மந்திரி இந்திரா காந்தி கூறினார்.

பம்பாய், ஸோபியா கல்லூரி யில்பெண்கள் பாலிடெக்னிக்குக்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் பிரதமர் மேலும் கூறியதாவது,

1950 லிருந்து பள்ளி செல்லும் குழந்தைகளின் தொகை மும்மடங் காகப் பெருகியுள்ளது. ஆனாலும் நாம் அளிக்கும் கல்வி நவீன உலகின் தேவைகளைச் சமாளிக்கக் கூடியதாயிருக்கிறதா என்ற சந்தே கம் ஏற்படுகிறது. ஒரு சுபீட்ச மான டெக்னலஜி துறையில் முன் னேறியுள்ள ஒரு தொழில் வள சமுதாயத்தைச் சமைப்பதே நாட் டின் முன்புள்ள பணி. நமது கல்வி ஸ்தாபனங்கள் இப்பணிக்கு நமது இளைஞர்களைத் தயார் செய் தல் வேண்டும்.

ஸோமானி குடும்பத்தின் நன் கொடை ரூபாய் மூன்றரை லட் சத்தையும் மற்றும் சில தர்மஸ்தா பனங்களின் உதவியையும் கொண்டு ஸோபியா கல்லூரி பெண்களுக்கென்று இந்தப் பாலி டெக்னிக்கை நிறுவுகிறது.

58 வயதுக்கு முன்பே ஆசிரி யர்களை "ரிடையர்" செய்ய அரசுக்கு அதிகாரம்

ஆசிரியர்களுக்கு 3 மாத நோட் டீஸ் கொடுத்து விட்டு, 55-வது வயதிலோ அல்லது 55-க்கும் 58—க்கும் இடையிலோ எப்போது வேண்டுமானாலும் ரிடையர் செய்யும் அதிகாரத்தை தமிழக சர்க்கார் மேற்கொண்டுள்ளது.

அதுபோல, ஆசிரியர்களும் 3 மாத நோட்டீசு கொடுத்துவிட்டு 55-வது வயதிலோ, அல்லது 55க் கும் 58க்குமிடையிலோ ரிடைய ராகலாம்.

தற்போது அமுலிலிருந்து வரும் உத்தரவு, இதற்கேற்ப மாற்றி யமைக்கப்பட்டிருக்கிறது இந்தப் புதிய உத்தரவு ஜூன் 12-ந் தேதி அமலுக்கு வந்திருக்கிறது.

பழைய உத்தரவின்படி (அதா வது 1963 மே 13-ந்தேதிபோட்ட

பட்ட உத்திரவின்படி) எல்லா நிர்வாகத்தின் கீழும் உள்ள, கல்வி இலாகா அங்கீகாரம் பெற்ற எல்லா ஆரம்பப் பள்ளிகள், செகண்டரி பள்ளிகள், விசேஷ பள்ளிகள், ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் ஆகியவற்றைச் சேர்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயது 55-லிருந்து 58-ஆக உயர்த்தப்பட்டது. இந்த உத்தரவு தொடர்ந்து அமுலிலிருந்து வரும்.

ஆனல், தற்போது ஓய்வு பெறும் வயது 58க்குமேல் இருந்து வரும். உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளேயும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளேயும் பொருத்த வரை அந்த வயதே ஓய்வு பெறும் வயதாக நீடித்துவரும். ஆனல் இதற்கு ஒரு நிபந்தனை, சர்க்காரிடமிருந்து முன் கூட்டி சம்மதம் பெருமல் 60 வயதுக்கு மேல் யாரும் வேலையில் நீடிக்கக் கூடாது.

சென்னை எஜுகேஷனல்சர்வீஸ், சென்னை எஜுகேஷன் சபார்டினேட் சர்வீஸிலுள்ளவர்களாயும், சர்க்கார் கலைக் கல்லூரிகளிலும், போதனமுறை கல்லூரிகளிலும் உள்ளவர்களாயு முள்ள எல்லா வகைகளேயும் சேர்ந்த ஆசிரியரியர்களின் ஓய்வுபெறும் வயது 1966 ஏப்ரல் 28-ந் தேதி யன்று, 55-லிருந்து 58 ஆக உயர்த்தப் பட்டது. அது தொடர்ந்து அமலிலிருந்துவரும்.

சர்க்கார் தொழில்நுட்பபயிற்சி நிலையங்களிலுள்ள கெஜட் பதிவு பெற்றவர்களாயும், கெஜட் பதிவு அற்றவர்களாயும், உள்ள எல்லா வகை ஆசிரியர்களுக்கும் ஓய்வு பெறும் வயது 58 ஆக நீடித்து வரும்.

சென்னை எஜுகேஷனல் சர்வீஸ் களிலும் சென்னை எஜுகேஷன் சபார்டினேட்சர்வீசிலுமுள்ள தணிக்கை (இன்ஸ்பெக்டிங்) ஊழியர்களுக்கும், ஓய்வு பெறும் வயது 58-லிருந்து 55 ஆகக் குறைக்கப் பட்டிருக்கிறது. இந்தப் புதிய உத்தரவின் தேதியில் இந்தப் பதவிகளே வகித்து வந்த ஊழியர்களின் ஓய்வு வயது 55 ஆக இருக்கும்.

இதேபோல தொழில் நுட்ப டைரக்டர் பிரிவிலுள்ள ஆசிரியர்களல்லாத தொழில் நுட்ப கெஜட் ஊழியர்களுக்கு ஓய்வு பெறும் வயது 55 ஆக இருக்கும்.

பாங்குகளிலுள்ள டெபாஸிட்டுகள்

16 லட்சம் பேர் 4260 கோடி போட்டுள்ளனர்

1968ம் வருஷத்தின் முடிவில் இந்திய பாங்குகளில் இருந்த மொத்த டெபாசிட்டுகள் ரு. 4260 கோடி. பணம் போட்டவர்களின் (டெபாசிட் செய்தவர்கள்) எண்ணிக்கை 16 லட்சம்.

இந்திய பாங்குகள் சங்கத்தின் தலைவரான ஆர். பி. ஷா இந்தத் தகவலே இன்று ஒரு கூட்டத்தில் வெளியிட்டார்.

இந்தியாவில் பாங்கு டெபாசிட்டுகள் மொத்த தேசிய வருமானத்தில் 12·1 சதவிகிதம்தான். யு எஸ், மேற்கு ஜெர்மனியில் இந்த விகிதாசாரம் 40 சதவிகிதமாகவும் பிரிட்டனில் 24 சத விகிதமாகவும் இருக்கிறது.

*விரல்களாலேயே வெற்றிக்குறி காட்டிய வீரர்—
பதட்டமில்லாதவர்—பகையே உன்னை இந்தக் காலில்
மிதிப்பேன் என்று சாடிபெழுந்தவர்—உலக நாடுகளின்
பாதுகாப்புக்கு நடுக்கடலில் சாசனம் தீட்டியவர்—
இத்தனைக்கும் பெயர்தான்......*

வின்ஸ்டன் சர்ச்சில்

நாஜிப் படையினர் பெல்ஜியம், ஹாலந்து, பிரான்ஸ் முதலிய நாடுகளை வென்று பிரிட்டனை நோக்கித் திரும்பியபோது, பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக திரு. வின்ஸ்டன் சர்ச்சில் பதவியேற்றார். "நாட்டைக் காப்பதற்கு நான் தருவது உழைப்புதான். வியர்வை சிந்த உழைப்பேன். இரத்தம் சிந்தப் போராடுவேன். வெற்றி காணும் வரை ஓயமாட்டேன்" என்று பாராளுமன்றத்தில் கூறி, நாட்டு மக்களின் திகைப்பை மாற்றிய தீரன் திரு. சர்ச்சில். "வெற்றி மகத்தான தியாகம் செய்து வெற்றி பெறுவதே நமது குறிக்கோள். வெற்றியில்லையேல் வாழ்வுமில்லை" என்றார் அவர். பிரிட்டிஷ் படைகள் டன்கிர்க்கிலிருந்து வெளியேறிய பிறகும், அவர் இதையே தான் வற்புறுத்தினர். "அரககனை எதிர்த்துப் போராடுவோம். ஆண்டுகள் பல போராட நேர்ந்திடினும் சரி, நாம் தனித்து நிற்க நேர்ந்திடினும் சரி, நாம் தலை கொடுத்தேனும் தாய்நாட்டைக் காப்போம். பகைவனை எதிர்த்துப் போராடுவோம். விண்ணிலேறிச் சாடுவோம். வீதியில் நின்று சமர் புரிவோம். கடற்கரை, காடு, மலை எங்கு எதிரி தோன்றினும் அவனை வெட்டி வீழ்த்துவோம். சரணடையும் பேச்சுக்கே இடமில்லை. வெற்றியே நமது குறிக்கோள். அதை அடைந்தே தீருவோம்" என்றார் அவர்.

உலகின் தலைசிறந்த அரசியல்வாதிகளில் ஒருவரான ஸர். வின்ஸ்டன் சர்ச்சில், தமது நெடுங்கால வாழ்க்கையில் பல மேடு பள்ளங்களைக் கண்டவர். அவர் போர்வீரனாகவும், போர் அரங்க நிருபராகவும், கலைஞனாகவும் வாழ்ந்தவர். அரசியலில் அமோக வெற்றி பெற்றபோதும், தோல்வியடைந்த போதும் மனந்தளராது அவர் உழைத்திருக்கிறார். அவர் துன்பத்தையும், துயரங்களையும் எதிர்த்து வென்ற வீரர். அதிர்ச்சியைத் தாங்கும் மனமும், கூர்ந்த மதியும் தெளிந்த சிந்தனையும் நாவன்மையும் படைத்தவர்.

திரு. வின்ஸ்டன் லியோனார்டு ஸ்பென்ஸர் சர்ச்சில் 30-11-1874-இல் பிளென்ஹீம் மாளிகையில் பிறந்தார். அவருடைய முன்னோர்கள் போரிலும் ராஜதந்திரத்திலும் புகழ்பெற்றவர் அவருடைய தந்தை ரண்டால்ப் சர்ச்சில் பிரபு, புகழ் பெற்ற ராணுவத் தளபதியாக விளங்கினர்.

ஹாரோவில் கல்வி கற்று ஸான்டர்ஸ்ட் ராணுவக் கல்லூரிக்குச் சென்றார். 1864-ஆம் ஆண்டில் அவர் நான்காவது ஹஸார்ஸ் குதிரைப் படையில் சேர்ந்து உலகின்

பல அரங்குகளில் பணியாற்றினர். ஒரு சில ஆண்டுகளுக்குள் ராணுவ வாழ்க்கை கசந்துவிடவே, அவர் 1899-இல் தமது பதவியிலிருந்து விலகிக் கொண்டார். அரசியலில் தீவிரப் பங்கெடுத்துக் கொள்வதுடன், இலக்கியப் பணி ஆற்ற வேண்டும் என்றும் அவர் விரும்பினர். இந்த ஆண்டில் ஓல்டாம் தொகுதியில் நடந்த உப தேர்தலில் போட்டியிட்டு, அவர் தோற்றார்.

சின்னட்களில் தென் ஆப்பிரிக்காவில் போயர் யுத்தம் தொடங்கியதால் 'மார்னிங் போஸ்டு' பத்திரிகையின் நிருபராகப் பணியேற்று போர் அரங்குக்குச் சென்றார். அங்கு அவருக்குப் பல சோதனைகள் ஏற்பட்டன. எதிரிகளிடம் சிக்கிக் கொண்டதால் பிடோரியா சிறையில் தங்க நேரிட்டது. சாகசமிக்க சர்ச்சில் சிறையிலிருந்து தப்பி பிரிட்டிஷ் படையில் சேர்ந்து கொண்டார். அதுமட்டுமல்ல ; குதிரைப் படையின் துணைத் தலைவராகப் பதவியேற்று போரில் கலந்து கொண்டார். 1900-ஆம் ஆண்டில் வெற்றி வீரனாக பிரிடோரியாவில் நுழைந்தார்.

போர் முடிந்துவிட்டதெனக் கருதிய திரு. சர்ச்சில், தமது பதவியைத் துறந்துவிட்டு நாடு திரும்பினர். அந்த ஆண்டில், நடந்த பொதுத் தேர்தலில் மீண்டும் போட்டியிட்டு. வெற்றியடைந்தார். பொதுச் சபையில் கன்ஸர்வேடிவ் கட்சி உறுப்பினராக அமர்ந்து செயலாற்றினர்.

அடுத்த பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பு கன்ஸர்வேடிவ் கட்சியில் பிளவு ஏற்பட்டதால், திரு சர்ச்சில். அந்தக் கட்சியிலிருந்து விலகி லிபரல் கட்சியில் சேர்ந்தார். 1906-ல் நடந்த பொதுத் தேர்தலில் வடமேற்கு வான்செஸ்டர் தொகுதிப் பிரதிநிதியாகப் பாராளுமன்றத்தில் இடம் பெற்றார் : அமைச்சரவையிலும் அவருக்கு இடம் கிடைத்தது. காலனி உதவி அமைச்சராகப் பதவியேற்றார் 1908-ல் உள்துறை அமைச்சராகவும் 1911ல் கடற்படை அமைச்சராகவும் பணியாற்றினர். முதல் உலகப் போர் தொடங்கியதும், கடற்படைக்கு ஆணையிட ஆண்ட்வெர்ப் அரங்குக்குச் சென்றார்.

போர் முடிந்த பிறகு அவர் ராணுவத்துறை அமைச்சராகவும். பிறகு காலனி அமைச்சராகவும் பணியாற்றினர். 1922-ல் லாயிட் ஜார்ஜ் அரசாங்கம் தோல்வியுற்றதும் திரு சர்ச்சில் அரசியலிலிருந்து விலகினர். அடுத்த இரண்டு ஆண்டுகளை அவர், நூல்களை எழுதுவதில் செலவிட்டார். 1923-ல், அவர் எழுதிய 'உலக நெருக்கடி' என்ற நூல் வெளிவந்தது. அது விமர்சகர்களின் பாராட்டைப் பெற்றது

ராஜதந்திரத்தில் ஊறித் தேர்ந்த மனம், அவரை வெகுகாலம் ஒதுங்கி நிற்க விடவில்லை, 1924 ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில், கன்ஸர்வேடிவ் கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டு, எதிர்த்தவர்களைவிட பத்தாயிரம் வாக்குகள்

அதிகம் பெற்று வெற்றியடைந்தார். 1930-39 ஆண்டுகளில் அவர் தீவிர அரசியலிலிருந்து ஒதுங்கி, நூல்கள் எழுதுவதில் கவனம் செலுத்தினார்.

ஐரோப்பாவில் ஹிட்லர் போர் முரசு கொட்டிபோது. பிரிட்டிஷ் அரசாங்கம் சமாதான ஆர்வத்துடன் செயலாற்றி வந்தது. அரசாங்கத்தின் போக்கை திரு. சர்ச்சில் தீவிரமாக எதிர்த்தார். ஆஸ்திரியா வீழ்ந்ததும், பிரிட்டிஷ் சர்க்காரின் சமாதான முயற்சி பலிக்காது என்பது தெளிவாயிற்று. சர்ச்சிலின் சாணக்கியத்தில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. இரண்டாம் உலகப் போர் மூண்டதும் திரு. சர்ச்சில் கடற்படை அமைச்சராகப் பதவியேற்றார். 1940-ம் ஆண்டு மே மாதத்தில் அவர், கூட்டு மந்திரி சபையை அமைத்து. அரசாங்க நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டார்.

''நாட்டுக்கு அபாயம் ஏற்பட்ட சமயங்களில், அபயம் அளித்து. மக்களைக் காத்த பெருமக்கள் வரிசையில் திரு. சர்ச்சிலும் இடம் பெற்றுவிட்டார். நெருக்கடி ஏற்பட்ட காலங்களில் நாட்டைக் காத்த டிரேக். கிராய்வெல், மால்பரோ, பீட், நெல்ஸன் முதலிய சான்றோர்களைவிட, திரு. சர்ச்சிலுக்குப் பிரிட்டிஷ் மக்கள் பெரிதும் கடமைப்பட்டவர்கள்'' என்று வரலாற்று ஆசிரியர் ஏ.எல். ரௌஸ் கூறுகிறார். அன்றுதான் திரு. சர்ச்சில் நடுக் கடலில் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டைச் சந்தித்து மக்களுரிமைகளைக் காக்க உறுதி எடுத்துக் கொண்ட அட்லாண்டிக் சாசனத்தில் கையெழுத்திட்டார்! 1941—45 ஆண்டுகளில், அவர், ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவதற்காக ஐந்து முறை அமெரிக்காவுக்குச் சென்றார். பிரிட்டனும் ரஷ்யாவும் நேச உடன்படிக்கை செய்து கொண்ட பிறகு, 1942-லும் 1944-லும் மாஸ்கோவுக்குச் சென்றிருக்கிறார்.

போர் முடிந்ததும் நடந்த பொதுத் தேர்தலில் தொழிற் கட்சிக்கு அமோகமான வெற்றி கிடைத்தது. மக்களுடைய தீர்ப்பைக் கண்டு திரு. சர்ச்சில் மனம் கலங்கவில்லை. பதவியை விட்டு விலகும்போது அவர் கூறினார். ''தேர்தல் மூலம் மக்கள் தம்முடைய முடிவைத் தெரிவித்து விட்டார்கள். இருள் சூழ்ந்திருந்த சமயத்தில் நாட்டைக் காப்பாற்ற நான் ஏற்றுக் கொண்ட பொறுப்பிலிருந்து இன்று விலகுகிறேன். நெருக்கடியானதோர் தருணத்தில் என்பால் நம்பிக்கை வைத்து, என்னுடைய முயற்சிகளுக்கு ஆதரவளித்த மக்களுக்கு, நான் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறேன்.''

திரு. சர்ச்சில் 1945—1951 ஆண்டுகளில், பொதுச் சபையில் எதிர்க் கட்சித் தலைவராக அமர்ந்து பணியாற்றினார். 1951-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கன்ஸர்வேடிவ் கட்சி வெற்றி பெற்றதால், திரு. சர்ச்சில், மீண்டும் பிரதம மந்திரியாகப் பதவியேற்

னார். தம்மிடம் ஒப்படைத்துள்ள பொறுப்பைச் செவ்வனே செய்வதாகவும், உலக அமைதியைக் காப்பதற்காக நேசநாடுகளுடன் இணைந்து பணியாற்ற உறுதி பூண்டிருப்பதாகவும் அவர், 1951 டிசம்பர் மாதத்தில், தேச மக்களுக்கு, வானொலி மூலம் வழங்கிய செய்தியில் குறிப்பிட்டார்.

திரு. சர்ச்சில் எழுதிய நூல்கள் இலக்கியச் சிறப்புடையவை என்று இலக்கிய மேதைகள் பாராட்டியதால், 1953-ம் ஆண்டில் அவருக்கு நோபெல் பரிசு வழங்கப்பட்டது.

1955-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், அதாவது தமது எண்பதாம் பிராய நிறைவு விழாக் கொண்டாடிய சில நாட்களுக்கெல்லாம், அவர் பதவியிலிருந்து ஓய்வு பெற விரும்பினார். பிரதம மந்திரி பதவியை ராஜினமாச் செய்தார். பிரபுக்கள் சபையில், ஸாலிஸ்பரி பிரபு திரு. சர்ச்சிலுடைய சேவையைப் பாராட்டியபோது பின்வருமாறு கூறினார். "பிரிட்டிஷ் மக்கள் திரு. சர்ச்சிலை என்றென்றும் மறக்க மாட்டார்கள். அவர் அஞ்சா நெஞ்சம் படைத்தவர். போர் மூண்ட காலத்தில் அவர் மனஞ் சோர்ந்து விடவில்லை, ரத்தம் சிந்துவோம், உயிர் கொடுத்து நாட்டைக் காப்போம் என்று குரல் கொடுத்தார். அவர் கருணை உள்ளம் படைத்தவர். மனித உரிமைகளைக் காப்பதில் ஆர்வம் மிக்கவர். இந்த நற்குணங்களால் தான் அவர், இன்றைய உலகில் சான்றோனாக வாழ முடிகிறது."

சர்ச்சில் ஓய்வுபெறும் செய்தியைக் கேட்டு உலகம் திடுக்கிட்டது. அவர் ஆற்றிய பணிக்கு நன்றி கூறி வாழ்த்திற்று. "அவர் ஓர் மேதை, நம்முடன் வாழும் சான்றோர்" என்று ஆஸ்திரேலியா பிரதம மந்திரி திரு. மென்ஸிஸ் கூறினார், "சர்ச்சிலின் சாதனையால் இன்று மேற்கத்திய நாடுகள் சுதந்திரமாக வாழ்கின்றன" என்று மேற்கு ஜெர்மனியின் தலைவர் டாக்டர் அடினார் கூறினார். "அவர் சரித்திரத்தை உருவாக்கியவர், சரித்திர புருஷர்" என்று நார்வே தலைவர் பாராட்டினார்.

திரு. சர்ச்சில் சிறந்த நாவன்மை படைத்தவர். நினைத்ததை ஒளியாமல் கூறும் இயல்புடையவர். 1908-ஆம் ஆண்டில் அவர் கர்னல் ஸர். ஹோஸியருடைய மகள் திரு வாட்டி கிளெமண்டைனைத் திருமணம் செய்துகொண்டார். சர்ச்சில் தம்பதிகளுக்கு ரண்டால்ஃப் சர்ச்சில் என்றொரு மகனும் மூன்று மகள்களும் உண்டு!

—"முத்தாரம்"

உலகத்துப் பழமொழிகள்

எந்த மனிதன் சாகும்போதும் அவனுடைய பாதி ஆசைகள்கூட நிறைவேறுவதில்லை.

—ஹீப்ரு

வேலையின்மை ஆயிரம் வியாதிகளைக் கொண்டு வருகிறது.

—இந்தியா

ஆயிரம் முறை சிந்தனை செய். ஆனால் முடிவெடுப்பது ஒரு தடவையாக இருக்கட்டும்!

—துருக்கி

தாயை யாருடனும் ஒப்பிடலாகாது. அவள் ஒப்பற்றவள்.

—பெல்ஜியம்

கஞ்சனுடைய பணப் பெட்டியைத் திறக்கும் சாவி—சாவின் கையில் இருக்கிறது.

—ஆப்பிரிக்கா

அன்பு செலுத்து—சிங்கத்தின் மீசையைக்கூட உன்னால் பிடுங்க முடியும்.

—அராபியா

பணமில்லாதவன் பாய்மரமில்லாத கப்பல் மாதிரி.

—ஜப்பான்

ஒவ்வொரு மயிராக விழுந்துதான் தலை வழுக்கையாகிறது.

—வேல்ஸ்

மனைவி ஒரு கம்பளம் மாதிரி. அதை எடுத்துப் போர்த்திக் கொண்டால் தொந்தரவாக இருக்கிறது. தூக்கியெறிந்து விட்டால் குளிர் வாட்டுகிறது.

—இங்கிலாந்து

மனிதனுடைய வாழ்வில் கவலைக்குரிய செய்திகள் மூன்று. இளமையில் தந்தையை இழப்பது—நடு வயதில் மனைவியை இழப்பது—வயோதிக காலத்தில் மக்களின்றி இருப்பது.

—சீனா

வாங்குகிறவனுக்கு நூறு கண்கள் தேவை; விற்கிறவனுக்கு ஒன்று போதும்.

—ஜெர்மனி

பக்தி இயக்கம் தந்த மறுமலர்ச்சி
கவிதைக் கலை

சிறுவை மோகனசுந்தரன்,
(தமிழ்க் கலைக்களஞ்சியம், சென்னைப் பல்கலைக்கழகம்)

இந்தியப் பண்பாட்டின் சிகரமென விளங்குவது பக்தி நெறிதான். பக்தி நெறியின் பிறப்பிடம் தமிழகம்தான் என்று பதினெண் புராணங்களில் ஒன்றாகிய பதும புராணம் கூறுகின்றது. உலகமெலாம் தனி நிறைந்த உண்மையாகி, யோகியர்தம் அனுபவத்தின் உவப்பாகி இருக்கும் பரம் பொருளை உணர்தற்கு உரிய சிரிய வழியாக பக்தி நெறியைக் கையாண்டனர் நம் முன்னோர். அன்பின் வடிவாக விளங்கும் இறைவனை,

"அன்பெனும் பிடியுள்
அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும்
அரசே"

என்றார் திருவருட்பிரகாச வள்ளலார்.

அப்படிப்பட்ட இறைவனை அடைவதற்குக் கானகம் சென்று, காய்கனி தின்று, கடுந்தவம் செய்து துன்பம் அடைய வேண்டா

"ஊன்வாட உண்ணாது
உயிர் காவலிட்டு
உடலிற் பிரியாப்
புலனைந்தும் நொந்து
தாம்வாட வாடத் தவம்
செய்ய வேண்டாம்"

என்ற திருமங்கையாழ்வார் கூற்றாலும்,

"அளவிறந்த நெடுங்காலஞ்
சித்தர் யோகர்
அறிஞர்மல ரயன்முதலோ
ரனந்த வேதம்
களவிறந்துங் கரணாதி
யிறந்துஞ் செய்யுங்
கடுந்தவத்துங் காண்பதரிதாங்
கடவுளாகி"

என்ற இராமலிங்கர் திருவாக்கினாலும் அறிகிறோம்.

உள்ளத்தே உறையும் இறைவனை வழிபடுவதற்குரிய பக்தி நெறியை அருள்நெறிச் சான்றோர்கள் இரண்டாகப் பகுத்தனர். ஒன்று திருக்கோயில் வழிபாடு; மற்றொன்று ஆன்ம வழிபாடு. நடமாடும் கோயில்களாக உள்ள மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசுவரனுக்கு உகந்த தொண்டு என்பது அன்பு நெறியின் கோட்பாடு. இவ்வன்பு நெறியின் கொள்கையினையும் கோட்பாடுகளையும் விளக்குவது தேவார, திருவாசகமும், நாலாயிர திவ்வியப் பிரபந்தமும்தான். அதுவும் தமிழிலே உள்ளமை உலகறிந்த உண்மை.

"சிவானுபவம் பெற தமிழ் மொழி ஒன்றினிடத்தே என்னைப் பற்று வைக்கச் செய்து" என்று கூறுபவர் இராமலிங்க அடிகளாவார். அருள்நெறிச் சான்றோர்கள் பாடிய தமிழ்ப் பாக்களுக்கு அவ்வளவு வல்லமை உண்டு எனத் தெரியவருகிறது.

"தவம் செய்து உள்ளொளி பெருக்கி அதனால் பெரும் வெப்பத்தினால் ஆன்மாவைத் தெரியவொட்டாமல் மூடியிருக்கின்ற திரைகளை நீக்க முயல்வதைவிட, நினைந்து நினைந்து பாடி பக்தி செலுத்தி அதனால் பெறுகின்ற வெப்பத்தின் மூலமாக அத்திரைகளை நீக்கி இறையருளைச் பெறலாம் என

"நினைந்து நினைந்(து)
உணர்ந்(து) உணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந்
தன்பே
நிறைந்து நிறைந்(து)
ஊற்றெழுங் கண்
ணீரதனால் உடம்பு
நனைந்து நனைந்(து)
அருளமுதே
நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை
நாயகனே என்று
வனைந்துவ னைந்(து)
ஏத்துதும் நாம்
வம்மினுல கியலீர்"

என நம்மையே அழைத்துச் செல்கிறார் திருவருட்பிரகாச வள்ளலார்.

இவருக்கு முன் பல நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய நாவுக்கரசர்,

"நெக்கு நெக்கு
நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார்
சடைப் புண்ணியன்"

எனப் பேசுகிறார்.

"ஆடி ஆடி அகங்
கரைந்து, இசை
பாடிபாடிக் கண்ணீர்
மல்கி எங்கும்
நாடிநாடி நரசிங்கா......

என்று நம்மாழ்வார் அவர்களும் பாடிப் பரவசப்படுவதைப் பார்க்கிறோம். இவ்வாறு உச்சநிலை அடைந்த பக்தி இயக்கம் பல்லவர் காலத்தில்தான் மலர்ந்தது. சுண்ணும்பு செங்கற்களினால் அமைந்த கோயில்களைக் கற்கோயில்களாக மாற்றிய காலமும் அதுவே. பல்லவர் காலத்திற்குமுன் இருந்த களப்பிரர் காலத்தில், சமய ஒற்றுமை சீர்குலையத் தொடங்கியது.

பிறப்பால் உயர்வு தாழ்வு கருதாதவன் முற்காலத் தமிழன். இடையே பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிப்பதற்கென்றே அமைக்கப்பட்ட சாதிமுறை, ஒன்றுபட்ட தமிழினத்தைப் பல வகைச் சாதிகளாய்ப் பிரித்து, அதனிடையே பகை வளர காரணமாக இருந்தது. ஆண் பெண் அடிமை வலியுறுத்தப்பட்டது. இந்நிலையில்தான் ஆடல்பாடலை ஒதுக்கிய புறச் சமயங்களை எதிர்த்தும் அச்சமயங்களைப் பின்பற்றியும் மன்னர்களின் ஆட்சியை எதிர்த்தும் நாயன்மார்களும் ஆழ்வார்களும் புரட்சி செய்யத் தொடங்கினர், அந்தக் காலம்தான் பல்ல

வர் காலம். பக்தி இயக்கம் பக்தி இலக்கியங்கள் மூலம் மறுமலர்ச்சி பெற்ற காலம். தன் உயிரையும் தமிழின்பத்தை நுகர்வதற்குப் பரிசாகக் கொடுத்து மாண்டான் ஒரு பல்லவ மன்னன் என்பதைத் தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் வரலாற்றிறல் அறிகிறோம்.

''தென்னாடுடைய சிவனே
போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா
போற்றி''

என்ற பாண்டிய நாட்டின் ஒருமைப்பாட்டு புத்துணர்ச்சி விந்தியத்தைக் கடந்து இமயத்தின் முடியில் எதிரொலித்தது எனக் கூறின் மிகையாகாது. நாயன்மார்கள், ஆழ்வார்கள் இயற்றிய பக்தி இலக்கிய இயக்கத்தில்—அவர்களின் கவிதையில் சாதிவேறுபாடு காட்டலாகாது இறை உணர்வைப் பெற என எடுத்துக்காட்டினர்.

''சாதிகுலம் பிறப்பென்னும்
சுழிபட்டுத் தடுமாறும்''

என மணிவாசகரும்,

''சாத்திரம் பலபேசும்
சழக்கர்காள்
கோத்திரம் குலமும் கொண்டு
என் செய்வீர்''

என்றும்,

''அங்கம் எலாம்
குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும்
புலையரேனும்
கங்கைவார்சடைக்கரந்தார்க்கு
அன்பராயின்
அவர்கண்டீர் நாம்
வணங்கும் கடவுளாரே!''

என்றும் திருநாவுக்கரசர் பேசுகின்றார்.

''குலந்தாங்கு சாதிகள் நாலிலும்
கீழிருந்து எத்தனை
நலந்தானிலாத சண்டாள
கண்டர்க ளாகிலும்
வலந்தாங்கு சக்கரத்து அண்ணல்
மணிவண்ணர்க்கு ஆளென்று உள்
கலந்தார், அடியார்
தம்மடியார்எம் அடிகளே!''

என நம்மாழ்வார் கூறும்போதும் பக்தி இயக்கச் சான்றோர்கள் ஒருமைப்பாட்டிலே எவ்வளவு திளைத்து நின்றனர் எனத் தெரிய வருகிறது. மேலும் அக்காலத்திலேயே சாதி வேறுபாடற்ற நல்லதொரு சமுதாயத்தைக் காண்பதற்குச் சமய குரவர்கள் எவ்வளவு அரும்பாடுபட்டார்கள் என அறிகிறோம்.

இவ்வாறு பக்திவெள்ளம் பெருக்கெடுத்து ஓடிய இப் பல்லவர் காலத்தில்தான் முதல் ஏழு சைவத் திருமுறைகளும், திருமூலர் திருமந்திரமும், காரைக்கால் அம்மையார்பாடல்கள், ஐயடிகள் காடவர் கோன் சிவத்தளி வெண்பாக்கள், சேரமான் பெருமாள் நாயனர் பிரபந்தங்கள் தோன்றிச் சிறப்புற்றன.

பல்லவர் காலத்தைக் கடந்து சோழர் காலத்துக்கு வருவோமாயின் நம்பியாண்டார் நம்பிகளின் பிரபந்தங்கள், பெரியபுராணம்,

கந்தபுராணம், திருவிசைப்பா, கருவூர்த்தேவர் பாடல்கள், கம்பராமாயணம், சிவஞானபோதம், சிவஞான சித்தியார் போன்ற பக்தி இயக்கக் கவிதைகள் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தன. மேலும் இறைவனே நுகரப்படும் பொருளாகிய தலைவியாகவும், தான் நுகர்வோனாகிய தலைமகனாகவும் இருந்து அனுபவிக்கும் நிலையாகத் திருக்கோவையார் திளைத்து நின்றது.

சோழர் காலத்தில்தான் பல புதிய கோயில்கள் கட்டப்பெற்றன. சோழர்கள் யாவரும் சைவப் பற்றும், சிவபெருமானிடம் சிறந்த அன்புடையவர்களாயினும் பிற சமயங்களின்மீது காழ்ப்பு இல்லாதவர்கள். இவர்கள் பௌத்த, சமண, வைணவக் கோயில்களுக்குச் செய்திருக்கும் திருப்பணிகளே சான்று பகரும். சோழ நாட்டில் மட்டும் 3,000 சிவத்தலங்கள் இருக்கின்றன எனக் கணக்கெடுத்துள்ளனர். தில்லைச் சிற்றம்பலத்தின் முகட்டைப் பொன் வேய்ந்த பெருமையும், பல கோயில்களைக் கற்றளியாக அமைத்த புகழும் சோழர்களையே சாரும். அக்காலத்தில் கல்லில் செதுக்கப்பட்ட சிற்பங்களும், சுவர்களில் காணப்படும் சுதை ஓவியங்களும் இன்றும் உயிர்ப்பும் துடிப்பும் உள்ளதாகக் காட்சி அளிக்கிறது.

கண்டராதித்தசோழனின் மனைவி செம்பியன் மாதேவியார் செய்த தெய்வத் திருப்பணி வரலாற்றில் நல்ல இடம் பெற்றிருக்கிறது. இத்தேவியார் பல கோயில்களைக் கற்றளியாக்கியுள்ளார்கள். முதலாம் இராசராசன் எடுப்பித்த தஞ்சைப் பெருவுடையார் கோயில் வானளாவி நின்று, அவன் புகழை இன்றும் நமக்கு எடுத்துக் கூறி வருகிறது. இராசராசனின் வீரப் பெருமகன் இராசேந்திர சோழனின் கங்கைகொண்ட சோழேச்சுரம் எனும் சிவன் கோயிலைக் கட்டி பெருமை பெற்றான்.

பொதுவாகத் தமிழகத்தில் ஊர்கள் ஒவ்வொன்றும் கோயிலை மையமாகக் கொண்டே வளர்ச்சி பெற்றன. அதை ஒட்டியே அவ்வூரின் சமுதாய வாழ்வும் அமைந்து இருந்தது. கோயில்கள் மக்களுக்கு உதவிபுரியும் அறநிலையங்களாகவும், அறிவை வளர்க்கும் கல்வி நிலையங்களாகவும், மன அமைதியை அளிக்கவல்ல ஆன்மிக உணர்வின் வளர்ப்புப் பண்ணைகளாகவும், உள்ளத்திற்கு மகிழ்வளிக்கும் அழகு தமிழ்க் கலைக்கூடங்களாகவும், அரிய நூல்களைக் கொண்ட நூல் நிலையங்களாகவும், சமுதாய நலன்களுக்குக் கடன் கொடுத்து உதவும் நிதிநிலையங்களாகவும் பொருட்காட்சிச்சாலை, மருத்துவமனை ஆகிய சமுதாயநலப் பணிகளையும் புரிந்து வந்தன.

மேலும் கோயில்களில் இசைக் கலையும், நாட்டியக் கலையும் போற்றிப் பாதுகாக்கப்பட்டன. இவைகள் தெய்வீக கலைகளாகப் போற்றப்பட்டதற்குப் பல கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன. பக்தி இயக்கம் தமிழகத்தை எங்ஙனமெல்லாம் பண்படுத்தியது எனத் தெரியவருகிறது.

சோழர் காலத்தையடுத்து நாயக்க மன்னர் காலத்திற்கு வரும்போது சோழமன்னர்களைப் போன்றே இவர்களும் பல கோயில்கள் எடுத்தனர். சோழர் நாயக்கர் காலத்தில் கண்ட சிற்பக் கலையும் ஓவியக்கலையும் இன்றும் உலகம் போற்றி வணங்கும் பெற்றியதாய் உள்ளது. பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம், அஷ்டப் பிரபந்தம், அருணகிரிநாதர் திருப்புகழ், குமரகுருபரர் நூல்கள், அதில் சிறப்பு மிக்க மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ். இவை தமிழ்ச் சுவையுடன் தேன்கலந்து, பால் கலந்து தெள்ளிய தீஞ்சுவை கலந்து உவட்டாது இனிக்கும்தன்மையானவாம். துறைமங்கலம் சிவப்பிரகாசர் இயற்றிய நால்வர் நான்மணிமாலை, சமரச ஞானி தாயுமான சுவாமிகள் திருப்பாடல்கள் முதலியன பக்தி இயக்கத்தின் அருமையான பனுவல்கள். அருணகிரிநாதர் பாடியது சந்தமும் வண்ணமும் குழிப்புமாகிய அதாவது ஐகிப் பாடல்கள். இது பக்தி நெறிக்கு ஒரு கருவூலமாய் அமைந்தது.

புராணங்கள் மக்களுக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பை விளக்கும் வரலாற்று நூல்களாக அமைந்தன. கடவுள் தொடர்பு "குழவி மருங்கினும் கிழவதாகும்" ஆதலால் தெய்வங்களைக் குழந்தைகளாகப் பாவித்துப் பாடப்பட்ட பிள்ளைத்தமிழ் நூல்கள் பிறந்தன.

நாயக்க மன்னர்கள் காலத்தைக் கடந்து முகம்மதியர் ஐரோப்பியர் காலத்திற்கு வருவோமாயின் சிவஞான முனிவர் நூல்கள், தணிகைப் புராணம், சிவப்பிரகாச சுவாமிகள் நூல்கள், முத்துத் தாண்டவர் கீர்த்தனைகள், தண்டபாணி சுவாமிகள் நூல்கள், திரிகூட இராசப்பக் கவிராயர் இயற்றிய கவிதைகள், பல தல புராணங்கள், பல கலம்பகங்கள், உலாக்கள், பள்ளுகள், இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா, அருணாசலக் கவிராயர் பாடல்கள் இன்னபிற தோன்றி, பக்தி உலகில் அரசோச்சும் கவிதைகளாக மணம் கமழ்ந்தன. மற்றும் இரட்டை மணிமாலை, மும்மணி மாலைகள், மும்மணிக்கோவைகள், நான்மணி மாலைகள், அந்தாதிகள் எல்லாம் பக்திப் பனுவல்களாகவே திகழ்ந்தன.

முகமதிய சமயச் சார்பில் உமறுப்புலவர் பாடிய சீறுப்புராணம் தோன்றியது. குணங்குடி மஸ்தான் சாயபு அவர்கள் பக்திப் பாடல்களும், மெய்யுணர்வுப் பாடல்களும் இயற்றி அருளினர்கள். சர்க்கரைப் புலவர் நபிகள்மீது "ஆண்டவர் பிள்ளைத் தமிழும்" வேறு சில பாடல்களும் செய்தார்கள். அலியார் புலவர் பெருமான் இயற்றிய பாடல்கள் வழக்கற்றுப் போயின. நயினு முகம்மதுப் புலவர் "முகைதீன் மாலை" எனும் நூலை இயற்றினர்.

ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்த கிறித்தவ சமயப் பாதிரியார் தவத்திரு பெஸ்கி எனும் வீரமாமுனிவர் கிறித்தவ சமய காவியமாக 'தேம்பாவணி'யை இயற்றினர்.

இவரே 'திருக்காவலூர்க்கலம்பகம்' 'கித்தேரி அம்மானை' முதலிய பக்திப் பாடல்களையும் பாடினார்கள். மற்றொரு கிறித்தவப் பெரியார் திரு. கிருஷ்ணப்பிள்ளை அவர்கள் இரட்சண்ய காவியம், இரட்சண்ய சமய நிர்ணயம், இரட்சண்ய மனோகரம் முதலிய பனுவல்களை இயற்றினார். முன்சிப் வேதநாயகம்பிள்ளை எனும் கத்தோலிக்கக் கிறித்தவர். தெண்மதி மாலை, சர்வ சமய கீர்த்தனை, வேத தோத்திர மாலை முதலிய கவிதை நூல்களைத் தந்தார். இவர்கள் எல்லாம் கிறித்தவ சமய உலகில் பக்திநெறி பரவ உதவிய சான்றோர்கள் ஆவர்.

இவ்வுலகம் சென்ற நூற்றாண்டில் எளிய நடையில் ஆழமான பொருள் பொதிந்த புரட்சிகரமான கவிதைகளை விரும்பியது. அந்த நிலையில் சாதிசமய சாத்திரக் குப்பைகளை அகற்ற சமரச சன்மார்க்க சத் சங்க உலகத்தைத் தோற்றுவிக்க சிதம்பரம் திருவருட் பிரகாச வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகளார் ஆயிரக்கணக்கான பக்திப் பாடல்களைத் தந்தார்கள். ஊன் கலந்து உயிர் கலந்து தித்திக்கும் வகையில் பாடினார்கள். இவர் இயற்றிய கவிதைகளில் வெண்பா, விருத்தம், அகவல், கீர்த்தனைகள், கும்மிகள் எல்லாம் கலந்து இருக்கின்றன. இராமலிங்க அடிகளார்தான் பக்தி இயக்கத்திற்கு ஒரு புதிய பொலிவை உண்டாக்கினார் எனின் மிகையாகாது.

மக்கள் கூட்டத்தைப் பார்த்து, ''வம்மின், வம்மின் உலகியலீர், ஊன் உணவை ஒழியுங்கள், பொய் சொன்ன உள்ளத்தில் இறைவன் புகமாட்டான். சாதி மதங்கள் பிச்சுப்பிள்ளை விளையாட்டே, இறைவன் ஒருவன், அவன் ஒளிமயமாய் இருக்கிறான். அவனைத் தவம் செய்து அடைவதைவிட, பக்தி செய்து பசித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்து, நினைந்து நினைந்து அழுதால் பெறலாம் நல்ல வரமே'' என்று கூறுகின்றார். அந்த வரமும் தனக்காக அல்லாமல் ''ஆருயிர்கட்கெல்லாம் அன்பு செய்யவே அவ்வரம் எனக்கு நீ நல்கவேண்டும்'' எனக் கேட்கிறார் இறைவனை. நாயகி, நாயகன் முறையில் இவர் இயற்றிய 'இங்கிதமாலை' புலவர்களுக்கு நல்விருந்தாகும் ஒரு நற்றமிழ்ப் பனுவல். இறைவனுடன் இரண்டறக் கலக்கும் அனுபவ நூல்.

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பல புராணங்கள், பிள்ளைத் தமிழ், தூது, கோவை, உலா, காப்பியங்கள் முதலிய எண்ணிறந்த நூல்கள் இயற்றினார். இவர் பாடிய முருகன் பிள்ளைத் தமிழ், அகிலாண்ட நாயகிமாலை, திருவிடைமருதூர் உலா, பக்திச் சுவை மிக்கன. தேவார திருவாசகங்களில் உள்ள கனிவை இவர் நூல்களிலும் காணலாம்.

பின்னர் 20ஆம் நூற்றாண்டிற்கு வருவோமாயின் மகாகவி சுப்பிர

மணிய பாரதியாரின் பக்திப் பனுவல்களை நாம் மறக்கவே முடியாது. தேசப்பக்தியுடன் இறை உணர்வையும் மறக்காமல் மக்கள் மனத்தில் பதியவைத்தார். இராமலிங்க சுவாமிகளுக்குப் பிறகு சமரச நோக்குடன் தோத்திரப் பாடல்களும் ஞானப்பாடல்களும் இயற்றி, அதில், "பாருக்குள்ளே தெய்வம் ஒன்று, இதில் பற்பல சண்டைகள் வேண்டா" என்றெல்லாம் சொன்னார்.

இவர் கண்ணனைத் தாயாகவும், குருவாகவும், குலதெய்வமாகவும், காதலனாகவும், காதலியாகவும் பாவித்துப் பல பாடல்களைத் தருகிறார், பெரியாழ்வார்போல் "விளையாட்டுப் பிள்ளை" என்ற நிலையிலும் கண்ணனிடம் பக்தி செலுத்துகிறார். இப் பாடல்களில் பக்திச் சுவையும் கவிதையழகும் பண்ணழகும் ஒருசேர இருப்பதைக் காணலாம். பாரதியாரின் 'ஓம் சக்தி' பாடலும் 'முத்துமாரியம்மன்' பாடலும் சிறப்பானவை.

கி. பி. ஆறும் நூற்றாண்டில் தமிழகத்தில் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கிய பக்தி வெள்ளம், பல்லவப் பேரரசர் ஆட்சிக் காலத்தில் பொன்றாப் புகழ்பெற்ற பக்தி இலக்கியங்களைத் தமிழ்க் கடலின் கரையோரத்தில் கொண்டு வந்து சேர்த்தது. சோழப் பேரரசர் ஆட்சிக்காலத்தில் இசையும் கூத்தும், சிற்பமும் சித்திரமும், காவியமும் ஓவியமும், புத்துயிர் பெற்று விளங்கச் செய்தது. தென்னாடு எங்கும் திருக்கோயில்கள் விண்ணைத்தாண்டித் தழுவும் வகையில் அன்றைய சமுதாயத்தின் கலைக்கருவூலங்களாகத் திகழச் செய்தது. இவ்வுலகம் அன்பினில் தழைக்குமாறு வழிகாட்டிய "பக்தி இயக்கம்" தமிழகத்தின் மறுமலர்ச்சிக்குத் தோன்றாத் துணையாக இருந்து ஆற்றியுள்ள தொண்டின் திறத்தைச் சொற்களால் மதிப்பிட்டுரைக்க இயலாது.

உதவி :

சென்னை வானொலி நிலையம்

நீவிர் அறிவீரா?

இந்தியாவில் 8 லட்சம் பித்தர்கள்

இந்தியாவில் தற்போது 38 மன நோய் மருத்துவ நிலையங்கள் உள்ளதாகவும் மனநோயினுல்பிடிக்கப்பட்டவர்கள் கிட்டத் தட்ட 8 லட்சம் பேர் இருப்பதாகவும் மத்திய சுகாதார அமைச்சர் கே. கே. ஷா அண்மையில் லோகசபையில் கூறினர்.

38 மருத்துவ மனைகளிலும் சுமார் 17,323 நோயாளிகள் தங்கி சிகிச்சை பெற முடியும் என்று ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் அவர் தெரிவித்தார்.

பேய் தடுத்த திருமணம்!

திருமண வீட்டில் எல்லா ஏற்பாடுகளும் சித்தமாக இருந்தன. மணமகன் சிவதயாளும், மணமகள் கலாவதியும் தயாராக இருந்தார்கள்,

திடீரென்று மணமகளின் தந்தை மணமகனின் தந்தையிடம் சென்ருர் "உங்கள் வீட்டில் பேய்கள் நடமாடுகின்றன உங்கள் பிள்ளைக்கு என் பெண்ணை விட வயது அதிகம். ஆகவே இந்தத் திருமணம் நடக்கக் கூடாது" என்ருர்.

வார்த்தைகள் தடித்தன. பூசல் ஏற்பட்டது. இறுதியில் போலீசார் வந்து சேர்ந்தார்கள்,

கடைசியில், திருமணம் நடந்திருக்கவேண்டிய இடத்தில் மணமகன், அவருடைய தந்தை, மணமகளின் தந்தை மற்றும் ஐந்து பேர்கள் போலீஸாரால் கைது செய்யப்பட்டார்கள்,

டாக்ஸி டிரைவரின் நேர்மை

மணப்பெண் கோஷ்டியொன்று நுங்கம்பாக்கத்திலிருந்து டாக்ஸியில் பெரம்பூர் பாரக்ஸ் ரோடிலுள்ள வள்ளியம்மாள் கல்யாண மண்டபத்திற்குச் சென்றது டாக்ஸியில் இருந்து அனைவரும் இறங்கிக் கொண்டனர். கட்டணம் கொடுத்தவுடன் டாக்ஸி சென்று விட்டது.

நகைகளும், பட்டுபுடவைகளும் உள்ள பெட்டி டாக்ஸியின் பின்புறம் "டிக்கி" யிலிருந்து எடுக்க மறந்து விட்டது என்பது பின்னர் தான் மணப்பெண் கோஷ்டியினருக்குத் தெரிந்தது. தாங்கள் ஏறி வந்த டாக்ஸியை வலை போட்டுக் தேடினர்கள். இரவு 10 மணி ஆகிவிட்டது. இனி தேடுவதில் பயனில்லை என்று நம்பிக்கை இழந்துவிட்டனர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அவர்கள் வந்திறங்கிய டாக்ஸியே வந்தது. டிரைவர் சங்கர் நகைகளும், பட்டுப் புடவை அடங்கிய பெட்டியை கல்யாண கோஷ்டியினரிடம் ஒப்படைத்தார். டிரைவரின் நேர்மையை அனைவரும் பாராட்டினர்.

இரட்டைச் சோதரியில் ஒருத்தி கருவுற்றாள் : மற்றவளுக்கு மசக்கை

பத்தொன்பது வயது மாணவியான செல்வி பார்பரா மார்கன், ஒன்பது மாதங்களுக்கு முன்னர், ஜெர்மனியிலுள்ள பிரிட்டிஷ் படைவீரரின் மனைவியான தனது இரட்டைச் சகோதரி ஜிலியனுக்குக் கடிதம் எழுதிய போது, " உனது உடம்பிற்கு என்ன ? உடனே டாக்டரைப் பார் " என்று கேட்டிருந்தாள்.

ஏனெனில் மணமாகாத பார்பராவுக்கு மசக்கையும் வாந்தியும் தொல்லை கொடுத்தன. எனவே ஜிலியன் டாக்டரைப் பார்க்கப் போனாள் ; அவள் கருவுற்றிருக்கிறாள் என்று டாக்டர் கூறினார்.

இவ்விரட்டைச் சகோதரிகளுக்குச் சிறு வயதிலிருந்து ஒருவருக்கு நோய் வந்தால் மற்றவரும் நோய்க்குள்ளாகி வருகின்றனர் என்பதால், டாக்டர்கள் இவர்கள் மீது ஆழ்ந்த அக்கறை காட்டுகின்றனர்.

அண்மையில் ஜிலியனுக்குப் பேறு காலமானபோது, பார்பராவிற்கு வந்த கடுமையான பிரசவ வேதனையைத் தணிக்க மருந்து தர வேண்டி வந்தது. எனவே ஜிலியன் பிள்ளை பெற்ற மருத்துவமனையிலிருந்து, " சற்று பொறுத்துக்கொள், இன்னும் நெடுநேரமாகாது " என்று கடிதம் எழுதினாள்.

உயிர் காத்த நண்பன்-நாய்

நாயைப் போல் மனிதனுக்குச் சிறந்த நண்பன் ஏது ? ஒரு பதினெட்டு வயது இளைஞன் சோர்ந்து போய் மலையிலிருந்து பெரும் பாடு பட்டு இறங்கி வந்துகொண்டிருந்த போது, அவன் வந்த வழியின் குறுக்கே ஆறடி உயரப் பனிக்கட்டி கிடந்தது. அந்நேரத்தில் அவன் மேற்சொன்ன உண்மையை அறிந்தான்.

இனிமேல் ஓரடிகூட வைக்க முடியாது என்றிருந்த போது, தனக்கு முன்னால் திடீரென்று ஒரு நாய் காதை நிமிர்த்திக்கொண்டு நடந்து சென்றதை செயிச்சி கோண்டோ என்ற அவ்விளைஞன் கண்டான். அவன் கீழே விழுந்த போதெல்லாம் அந்நாய் குரைத்தது. அவனை நடக்குமாறு மூகத்தால் உராய்ந்தது.

அவன் ஓரிடத்தில் அப்படியே பனிமீது படுத்துவிட்டான். நாய் விடவில்லை. அது அவனை எடுத்து இழுத்து எழுந்து நிற்கச் செய்தது.

அப்போது அவன் உணர்வே யில்லாமல் நாயைப் பின் பற்றி நடந்து அடிவாரத்திலிருந்த ஒரு வீட்டை அடைந்தான்.

அங்கு அப்படியே வேரற்ற மரம்போல் சாய்ந்துவிட்டான். அவனுக்கு நினைவு திரும்பியபோது நாயைக் காணோம். அந்நாய் மட்டு மில்லாதிருந்தால் சோர்ந்து பனியில் விழுந்து விறைத்துச் செத்திருப்பான்.

"அந்நாய் இல்லாதிருந்தால் என்னை உயிருடன் பார்த்திருக்க முடியாது" என்று அவன் நன்றிப் பெருக்குடன் கூறுகிறான்.

ஜெமினி மூன்றடுக்கு சாலை

நெடுஞ்சாலை எஞ்சினியர் திட்டம் தயாராகிறது

மவுண்ட் சாலையில் ஜெமினியருகில் சாலைகள் சந்திப்பில் வண்டிப் போக்கு வரத்து நெரிசலைச் சமாளிக்க 3 அடுக்கு சாலைகள் அமைக்கலாம் என்ற யோசனையை நெடுஞ்சாலைத் துறை தெரிவித்துள்ளது. இதற்கான நிதி அனுமதியை அரசாங்கம் அளித்துவிட்டால், இந்தியாவிலேயே இத்தகைய புதுமையான சாலை அமைப்பை உடைய முதல் நகரம் என்ற பெருமை சென்னைக்குக் கிடைக்கும்.

இப்புதுச் சாலை அமைப்பை "பரிமாற்றம்" என்பார்கள். நெடுஞ்சாலை ஆய்வுத்துறை சூப்பிரின்டென்டிங் என்ஜினியர் திரு பி. ஜி. நம்பியார் புதுச் சாலைத் திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பை வகிக்கிறார். புதுச்சாலை திட்டத்தை அவர் நிருபர்களுக்கு அண்மையில் விவரித்தார்.

ஜெமினி சாலையின் சந்திப்பில் 3 அடுக்குச் சாலைகள் எப்படி அமையுமென்று விளக்கினார். சுரங்கச் சாலை ஒன்றும், அதன் அடுத்த தளத்தில் சமதரைச் சாலை யொன்றும், அதற்கு மேல் துரிதப் போக்குவரத்துச் சாலை மேம்பாலம் போன்றும் அமையும்.

இதற்கான திட்டம் பிரதம இன்ஜினியரிடம் ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்கப்படும். தொழில் நுட்ப முறையில் சரிபார்த்து அனுமதி பெறுவது அடுத்த கட்டம்.

"விரைவுப் போக்குவரத்து மேல் சாலை" அமைப்பதற்கு அரசாங்கம் ஏற்கனவே ரூ. 45 லட்சம் அனுமதித்துவிட்டது. மூன்று அடுக்குச் சாலை அமைப்பதற்கு அதிகப்படி செலவு பிடிப்பதாக இருந்தால், அதற்கான நிதியை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்.

—"தினமணி"

ஆளைக் கொல்லும் அதிசயக் கோபுரம்!

❋

உலகத்திலேயே மிக உயரமான கோபுரம் பாரிஸ் நகரில் உள்ள எய்பெல் கோபுரம்தான். அதனுடைய உயரம் 984 அடி. அதனுடைய வயது 75. அது உயரமான கோபுரம் மட்டுமல்ல-உயிர் வாங்கும் கோபுரமுங்கூட! தற்கொலைக்குத் தகுந்த இடமாக அந்தக் கோபுரத்தைத் தேர்ந்தெடுத்தவர்களின் எண்ணிக்கை 340.

கடந்த ஆண்டில் ஒரே நாளில் இரண்டு பேர் அந்தக் கோபுரத்திலிருந்து குதித்து உயிர் துறந்தனர். இந்த நிகழ்ச்சி அந்தக் கோபுரத்தின் 75 ஆண்டுகால வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுக்கொண்டது. இந்த ஆண்டு அக்டோபர் திங்களில் ஒரே வாரத்தில் மூன்றுபேர் இந்தக் கோபுரத்திலிருந்து குதித்து உயிர் துறந்தனர். குறிப்பிடப்படும் நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்றாகியது

எய்பெல் கோபுரத்தின் 75ஆம் ஆண்டு நிறைவு விழா கொண்டாடிய அன்று அந்தக் கோபுரத்தின் வரலாற்றைச் சிறப்பித்துக் காட்டும் வகையில் ஒருவர் எந்தவிதக் காரணமும் இல்லாமல் அதில் ஏறி விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

இந்தத் தற்கொலையெல்லாம் கண்ட பொதுமக்கள் கோபுரத்தின் உச்சிக்குச் செல்பவர்கள் கீழே குதிக்க முடியாத அளவிற்குப் பாதுகாப்புத் தேவை என்று ஒருமித்த குரலெழுப்பினர். ஆனால் இந்தக் கோபுரத்தை நிர்வகித்து வரும் சங்கம் பொதுமக்களின் வேண்டுகோளை மதிப்பதாகவோ, காதுகொடுத்துக்கேட்க முன் வருவதாகவோ காட்டிக் கொள்ளவில்லை. காரணம் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவேண்டுமானால் செலவு அதிகமாகுமெனக் கருதுகின்றனர். அடுத்து பாதுகாப்பிற்காக அவர்களின் உயரத்தை அதிகமாக்கினால் அது கோபுரத்தின் அழகைக் கெடுத்துவிடு மெனவும் சமாதானம் சொல்கின்றனர்.

கோபுரத்தின் நிர்வாகிகள் வேறு ஒரு வேடிக்கையான காரணமும் கூறுகின்றனர். தற்கொலை செய்து கொள்ளத் துணிந்துவிட்டவர்கள் எப்படியும் அதை முடித்துக் கொண்டுதான் தீருவார்கள்! இங்கில்லை என்றால் வேறு இடத்தில் அது நடந்தே தீரும் என்றும், ஒரு முறை தற்கொலைக்கு முயன்ற ஒருத்தியை எய்பெல் கோபுர வேலையாள் ஒருவன் தடுத்து நிறுத்தினான். ஆனால் அதே பெண் கோபுரத்தின் பக்கத்தில் உள்ள குளம் ஒன்றில் மறுநாள் விழுந்து இறந்துவிட்டாள். எனவே தற்கொலை செய்யத் துணிந்தவர்களை

யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. எனவே பாதுகாப்புச் சுவர் எழுப்பி கோபுரத்தின் அழகை, கவர்ச்சியைக் கெடுக்க முடியாது என்கிறார் அதன் நிர்வாகி.

இந்தக் கோபுரத்தில் மூன்று தட்டுகள் உள்ளன. இந்தக் கோபுரத்தைக் காண வருபவர்களின் எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு இருபது இலட்சம். நுழைவுக் கட்டணம் 1 ஷில்லிங் 6 டாலரிலிருந்து 7 ஷில்லிங் 6 டாலர்வரை.

இவ்வளவு கட்டணம் இருந்தும் கட்டணத்தைச் செலுத்திவிட்டுத் தற்கொலைசெய்துகொள்ளுகின்றனராம். இதைத் தடுக்க கோபுரத்தின் நிர்வாகிகள் ஒரு புதிய முறையைக் கையாளப் போவதாகக் கூறுகின்றனர். கோபுரத்தைப் பார்க்க வருகின்றவர்கள்-எப்படிப்பட்ட மனநிலையில் வருகிறார்கள்-விரக்தி நிலையோடா? களிப்பு பொங்கவா என்பதைக் கண்டறிந்து அவர்களை அனுமதிப்பதற்குக் கோபுரத்தின் கீழே ஒரு விஞ்ஞானக்கூடம் அமைக்கப் போகின்றனராம். இதைத் தவிர தற்கொலையைத் தடுக்க வேறு வழியில்லையென்கிறார், அந்தத் தலைவர்.

— " முத்தாரம் "

" ஆரம்பக் கல்வி "
ஆபீஸ்
94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of income
வருமான நற்சாட்சிப் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்தியேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்பத் தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

தெரிந்து கொள்ளுங்கள்

தொகுத்தவர் :—கி. மா. பக்தவத்சலன்

●

உலகத்திலேயே முதல் முதல் அச்சிடப்பட்ட புத்தகம் 'பைபிள்' தான். இது லத்தீன் மொழியில் ஆடு மாடுகளின் தோலில் அச்சிடப் பட்டது. அச்சிடப்பட்ட ஆண்டு 1455. மொத்தம் 200 பிரதிகளே அச்சிடப்பட்டன. ஒவ்வொரு பிரதியிலும் 1282 பக்கங்கள். ஒவ்வொரு பக்கத்திலும் 36 வரிகள். 200 பிரதிகளில் 47 பிரதிகள் இப்பொழுது ஜெர்மனியில் உள்ள தொல் பொருள் காட்சிசாலைகளில் (மியூசியம்) இருக்கின்றன.

இந்திய மொழிகளில் தமிழில்தான் முதல் முதல் புத்தகங்கள் அச்சிடப்பட்டன. தமிழில் அச்சிடப்பட்ட முதல்புத்தகம் 'லூசோ தமிழ்ச் சமய வினா விடை' என்பது. 1554-ல் போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பன் நகரில் இது அச்சிடப்பட்டது. இந்தியாவுக்கு வெளியே அச்சிடப்பட்ட முதல் இந்திய மொழிப் புத்தகமும் இதுதான். இதன் பிரதி ஒன்று லிஸ்பன் நகரில் உள்ள பழம் பெரும் பொருட்காட்சிச் சாலையில் இருக்கிறது.

தமிழகத்தில் அச்சான முதல் புத்தகம் 'தம்பிரான் வணக்கம்' என்பது. இந்தியாவில் அச்சிடப்பட்ட முதல் நூலும் இதுதான். என்றிகுவிஸ் பாதிரியார் தமிழில் எழுதிய கிறித்தவ நூல் இது. மர அச்சு எழுத்துக்களைக் கொண்டு 1578-ல் அம்பலக் காட்டில் (மலபார்) இந்தப் புத்தகம் அச்சிடப்பட்டது. இதன் இரண்டு பிரதிகள் இப்பொழுது அமெரிக்காவில் உள்ள அர்வர்டு பல்கலைக் கழக நூல் நிலையத்தில் இருக்கின்றன.

நேரு சமாதானப் பரிசை 1965-ம் ஆண்டு இந்திய அரசாங்கம் ஏற்படுத்தியது மறைந்த பிரதமர் நேரு பெயரில், ஆண்டு தோறும் உலகில் சுதந்திரம், நீதி, சமாதானம் ஆகியவற்றுக்காகப் பாடுபட்டவருக்கு இப்பரிசு வழங்கப்பட்டு வருகிறது. பரிசுத் தொகை ரூ. 1 லட்சம்.

ரஷ்யா 1966 ஆம் ஆண்டு அனுப்பிய 'வீனஸ்-டு' என்ற ராக்கெட்டு வரலாற்றிலேயே முதல் தடவையாக சுக்கிரனில் இறங்கியது. சுக்கிரன் பூமியில் இருந்து பதினேந்தரை கோடி மைல்கள் தூரத்தில் இருக்கிறது.

சிலப்புத் தலைவன்

மு. பி. பாலசுப்பிரமணியன், எம் ஏ., தமிழ் விரிவுரையாளர்,
(பச்சையப்பன் கல்லூரி, காஞ்சி.)

முன்னுரை :

மனிதனின் குணநலனை ஆராயும் போது குறையை மட்டும் வைத்துக் கொண்டு எடைபோடலாகாது. குறையையும் பார்க்க வேண்டும்; நிறையையும் பார்க்க வேண்டும்; பின்புதான் கொடுமைக்காரனா? அல்லது குணக்குன்றா என்ற முடிவுக்கு வர வேண்டும். சிலப்பதிகாரம், ஒரு குடிமக்கள் காப்பியம். கோவலன், கண்ணகி, மாதவி போன்ற குடிமக்களைப்பற்றிக் கூறும் காவியமே, சிலப்பதிகாரம். அதன் தலைவி கண்ணகி; தலைவன் கோவலன். தன் நிகர் இல்லாத் தலைவனாகத் திகழும் அவன்மேல் சாட்டப்படும் குற்றச் சாட்டுக்கள் சில உண்டு. "கோவலன் கொடுமைக்காரன்; அவன் நல்ல கணவனாக இல்லை; தேர்ந்த வணிகனாக இல்லை; அவன் ஒரு கோழை; அவன் அறங்களைச் செய்ததாகச் சான்றுகள் இல்லை; விருந்தோம்பலும் இனிய பேசலும் அவனுக்குப் புரியாத அறங்கள் ஆயின"—இத்தனை குற்றச் சாட்டுக்களுக்கும் இளங்கோவின் கோவலன் பொறுப்புடையவன் தானா? காப்பியத்திற்கு உள்ளே நுழைந்துதான் விடை காண வேண்டும்.

அன்புள்ள காதலன் :

காதலித்த கண்ணகியைக் கடிமணம் செய்து கொண்டான்; கைப்பிடித்த காரிகையைக் கண்போலப் போற்றுகின்றான். நிலா முற்றத்தில்— அழகிய கட்டிலில்—இருவரும் அமர்ந்திருக்கின்றனர். அவர்கள் மார்புகளில் கிடந்த மாலைகள் மயங்குகின்றன. கோவலன் கண்ணகியின் முகத்தைப் பார்க்கிறான். அதனை இளங்கோ, "தீராக் காதலின் திருமுகம் நோக்கி" என்று கூறுகிறார். தீராத காதலுடையவனாகக் கோவலன் காட்சி அளிக்கிறான். அப்போது அவனிடம் ஆழமான அன்பு மிளிர்கின்றது; உண்மையான பற்று ஒளிர்கின்றது. அந்த ஆழமான அன்போடு—கண்ணகியைப் போற்றியுரைக்கும் பாராட்டுரை போலியாகவோ, பொய்யுரையாகவோ தெரியவில்லை. கொலைக் களக் காதையில் கண்ணகியின் குடிப்பிறப்பையும் நாணம் முதலிய குணச் சிறப்பையும் பண்பட்ட உள்ளத்தோடு பாராட்டுகிறான் கோவலன். "நாணின் பாவாய் நீள் நில விளக்கே! கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி" என்று அவன் கூறும் புகழுரை, அவனது காதல் நெஞ்சைப் படம் பிடித்துக் காட்

டும் பொன்னுரையாகத் திகழ்கிறது.

இரக்கமுள்ள கணவன் :

புறஞ்சேரி இறுத்த காதையில் துணைவியின் துன்பத்தைக்கண்டு துடிக்கின்ற தூய கணவனைக் காட்சியளிக்கிறான் கோவலன். கானகத்தில் நடந்து செல்லும் கண்ணகியின் நிலையைக்கண்டு கலங்குகின்றான். அந்தக் கலக்கம் அவன் ஒரு 'நல்ல' கணவன் என்பதைக் காட்டுகிறது. "கடுங்கதிர் வெப்பத்தைக் கண்ணகி பொறுக்க மாட்டாள்; இரவு நேரத்தில்— இனிய நில வொளியில் நடந்து செல்லலாம்" என்று கவுந்தி அடிகளிடம் கூறுகின்ற பண்பு, இரக்கமுள்ள ஒரு நல்ல கணவனிடம் தான் இருக்கமுடியும். வழிநடைப் பயணத்தால் வருந்துகின்ற கண்ணகியை நோக்கி, "கொடிய புலிகள் நடமாடும்; கோட்டான்கள் அலறும்; கரடிகள் முழங்கும்; நீ அஞ்சாமல் நடக்க வேண்டும்" என்று அன்பொழுகக் கூறுகிறான். கூறியது மட்டுமன்று, "தொடிவளைச் செங்கை தோளிற் காட்டி" அணைத்து—அழைத்துச் செல்லுகின்றான். வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்த கோவலன் இவன் என்பதை மறந்து விடுகின்றோம்—மறக்கச் செய்கின்றார் இளங்கோ. 'காதலி தன்னெடு கானகம் போந்ததற்கு ஊது உலைக் குருகின்" உயிர்க்கின்ற கோவலனை —உள்ளம் கலங்குகின்ற கோவலனை—நாம் காண்கின்றோம்.

சிலம்பினை விற்கப் புறப்படும் போது கண்ணகியிடம் விடை பெறுகிறான். அந்த நேரத்தில் அவளுக்குப் பணிப் பெண்கள் ஒருவர் கூட இல்லையே என்பதற்காக மிகமிக வருந்துகின்றான். அவள் பெற்றோரையும் உற்றாரையும் பிரிந்து தனியளாக இருக்கின்ற நிலையினைக் கண்டு, உள்ளம் வெதும்புகின்றான். இரக்கமுள்ள அவன் கண்களில் நீர் ததும்புகின்றது. அதைக் கண்ணகி பார்த்துவிடக் கூடாதே என்பதற்காக மறைக்கின்றான். "வரு பனி கரந்த(—மறைத்த) கண்ணன்" ஆக வருந்துகின்ற கோவலன் தன் மனைவியின் மேல் வைத்திருந்த உண்மையான அன்பிற்கு இதை விட வேறு சான்று வேண்டுமோ?

சிறந்த கலைஞன் :

கோவலனின் கானல் வரிப் பாடல்களைக் கொண்டே, அவன் சிறந்த கலைஞன் என்று முடிவு கட்டிவிடலாம். பாடுவதில் மட்டுமன்று, யாழ் வாசிப்பதிலேயும் சிறந்த கலைஞனாகத் திகழ்கிறான் கோவலன். அதனைப் புறஞ்சேரி இறுத்த காதையில் நாம் காண்கின்றோம். கௌசிகனை அனுப்பி விட்டு, கவுந்தி அடிகளும் கண்ணகியும் இருக்கும் இடத்தை அடைகிறான். அந்த இடத்தில் பாணர்கள் பாடி ஆடுவதைப் பார்க்கின்றான். அவனுடைய கலை மனம் அவனை வாளா இருக்கவிடவில்லை. பாணரோடு சேர்ந்து பாட வேண்டும் என்று நினைக்கிறான். உடனே 'பாடும் பாணரிற் பாங்குறச்' சேர்கின்றான். 'செந்திறம்

புரிந்த செங்கோட்டியாழை' எடுத்து, அதன் நரம்புகளைத் திருத்தி, இசை மீட்டுகின்றான். பாணரோடு பாடுகின்றான்; ஆடுகின்றான். கலைக்கு அடிமையாகும் சிறந்த கலைஞனாகக் காட்சியளிக்கின்றான்.

கோவலன் வணிக குடும்பத்தில் பிறந்தவன்தான். அதற்காக அவனுக்கு வாணிகம் தெரிந்துதான் இருக்க வேண்டுமா? தந்தை செய்த தொழிலையேதான் மகன் செய்யவேண்டும்; தந்தைக்குத் தெரிந்த தொழிலேதான் மகனுக்கும் தெரிந்திருக்க வேண்டும் என்பதில்லை. செருப்புத் தைப்பவனின் மகன் செருப்புத்தான் தைக்க வேண்டும் என்றால் ஸ்டாலினை இந்த உலகம் கண்டிருக்க முடியாது. விறகு வெட்டியின் மகன் விறகு வெட்டிதான் பிழைக்க வேண்டும் என்றால் ஆப்பிரகாம் லிங்கனை இந்த உலகம் பெற்றிருக்க முடியாது. இவர்களைப் போன்ற மகான்களும் மேதைகளும் வெளியுலகத்திற்குத் தெரியாமல் மறைந்திருப்பார்கள் — குலத் தொழிலையே செய்து கொண்டிருந்தால்! எனவே கோவலனுடைய தந்தை, மலை போன்ற செல்வத்தை ஈட்டிய வணிகர்தான். அதற்காக அவருடைய மகனும் வணிகத் தொழிலிலே நிபுணனாக இருக்கவேண்டும் என்பதில்லை. கோவலன் வணிகம் செய்யாவிட்டாலும், பாடுவதிலும் யாழ் இசைப்பதிலும் வல்ல கலைஞனாகத் திகழ்ந்தான்—கலைவாழ்வு வாழ்ந்தான்!

உயர்ந்த வள்ளல் :

கோவலனின் வள்ளல் தன்மையை அடைக்கலக் காதையில் மாடல மறையோன் வாயிலாகக் காட்டுகிறார் இளங்கோ. இல்வாழ்வோன் செய்யவேண்டிய அறங்களை ஒரு குறைவுமின்றிச் செய்தவன் கோவலன் என்பது அப்போதுதான் புரிகிறது. மணிமேகலை பிறந்த நாளில், மங்கல மடந்தை மாதவியுடன், செங்கையினால் செம்பொன்னைத் தானமாக வாரி இறைத்த கோவலனா அறங்களைச் செய்ய மறந்தவன்? கணவனைப் பிரிந்த காரிகையின் துயரத்தைப் போக்கி கானகம் போன அவள் கணவனையும் கூட்டி வந்து "ஒல்காச் செல்வத்து உறுபொருள் கொடுத்து நல்வழிப்படுத்த செல்லாச் செல்வ"னாகத் திகழும் கோவலன் ஓர் உயர்ந்த வள்ளல் அன்றோ? பெற்ற மகனை இழந்து பேதலித்த தாயின் பெருந் துன்பத்தைக் கண்டு மனம் இரங்கி, அந்தத் தாய்க்கும் சுற்றத்தார்க்கும் நெருங்கிய உறவினனாக இருந்து "பசிப்பிணி அறுத்து பல்லாண்டு புரந்த இல்லோர் செம்ம"லான கோவலன் ஓர் உயர்ந்த வள்ளல் அன்றோ?

திண்தோள் வீரன் :

அரண்மனை சென்று திரும்பினன் பொற்கொல்லன். அவனுடன் வாளேந்திய காவலரும் வந்தனர். கோவலனிடம், "இவர்கள் மன்னவன் ஏவ, சிலம்பைக் காண வந்தவர்கள்" என்று வந்திருந்தோரை

அறிமுகப்படுத்துகிறான் பொற்கொல்லன். சிலம்பை விற்கவந்த கோவலன், சிலம்பைக் காணவந்த அவர்களிடம் சண்டையா செய்ய முடியும்? எனவே அந்த இடத்தில் கோவலன் கோழையாக இருந்தான் என்று கொள்ள முடியாது. அதே கோவலனுக்கு வீரத்தை வெளிக்காட்ட வேண்டிய வாய்ப்பு, முன்பு ஒருமுறை கிடைத்தது. அதனையும் மாடல மறையோனே தெரிவிக்கின்றான். யாருக்கும் அடங்காத மதம்பிடித்த யானையினை அடக்கி, கூன் விழுந்த முதியோனைக் காப்பாற்றும் திண்தோள் வீரன் கோவலன் என்பதை அறிகிறோம். யானையின் துதிக்கையில் புகுந்தான்; போர்செய்யும் கூர்மையான தந்தங்களில் கால் வைத்து ஏறினான்; விஞ்சையனைப் போல அதன் பிடரியில் அமர்ந்தான். மதங்கொண்ட யானையின் செருக்கினை அடக்கினான். மறவனாகக் காட்சியளித்தான். அதுவும் சாதாரண மறவனாக அல்ல: முதியோன் ஒருவனுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்த கருணை மறவனாகக் காட்சியளிக்கிறான். கடக்களிறு அடக்கிய கோவலன் ஒரு கோழையா? முதியோனைக் காத்த கோவலன் ஒரு கொடுமைக் காரனா?

ஒரே ஒரு குறை:

இத்தனை குணங்களுக்கும் உறைவிடமான கோவலனிடம் ஒரே ஒரு குறைதான் இருந்தது. ஆம்! அவன் **உள்ளத்தில் திண்மை இல்லை.** அந்த உள்ளத்திண்மை இல்லாத காரணத்தால்தான் கலவியும் புலவியும் கலந்து அளித்த மாதவியை, 'மாயப் பொய்பல கூட்டும் மாயத்தாள்' என்று தூற்றுகிறான். விடுதல் அறியா விருப்பினளாக யாரோடு இருந்தாளோ அந்த மாதவியை, 'சலம் புணர் கொள்கை சலதி" என்று இகழ்கிறான். அவ்வாறெல்லாம் தூற்றிய கோவலனே பின்பு மாதவியைப் போற்றவும் செய்கிறான். கௌசிக முனிவன் கொண்டுவந்த மாதவியின் மடலைப் படித்த பின்பு, 'தன்தீது இலள் எனத் தளர்ச்சி நீங்கி, என்தீது' என்று குற்றத்தைத் தன்மேலேயே சுமத்திக் கொள்கிறான். மாதவியை எந்தவிதமான தீமையும் செய்யாதவள் என்று உளமார—உணர்ந்து—போற்றுகிறான். அந்தப் போற்றுதலைக் கேட்டவுடன், முன்பு அவன் தூற்றிய கோவலன் என்பதை உணர்ந்து கொள்கிறோம்.

அடுத்து, மாதவியை விட்டுப் பிரியக் காரணமாக இருந்த உள்ளத் திண்மை இன்மையானது, கோவலனைப் புகார் நகரை விட்டுப் பிரியச் செய்கிறது. ஓர் இரவில் பயங்கரமான கனவுகண்டான்; புகார் நகரத்தில் இருந்தால் என்ன நடக்குமோ என்று அஞ்சினான், தான் கண்ட கனவிற்குப் பயந்து மதுரைக்குப் புறப்பட்டான். இந்த உண்மையை அடைக்கலக் காதையில் மாடல மறையோனிடம் "கனவு கண்டேன்; கடிது ஈங்கு உறும்" என்று கோவலனே கூறுகிறான். உள்ளத்திண்மை இல்லாத ஒரே ஒரு குறையைக்

கொண்டு, கோவலனைக் கொடுமைக்காரன் என்று கொள்ளலாமா? —அவன் குணநலனின் ஏதோ கோளாறு இருக்கிறது என்று கூறலாமா? குறையுடையவன் மனிதன் (To err is human). முழு நிலாவிலே முயல்தோற்றம் ஒரு குறைதான். ஆனால் நாம் அதைக் குறையாகவா கொள்ளுகின்றோம்? குறையை மறைக்கின்ற அளவிற்கு எவ்வளவோ குணநலன்களைப் பெற்ற குணக்குன்றாய்த் தோற்றமளிக்கிறான் கோவலன்.

பாராட்டுக்கள் :

ஒரு பாத்திரத்தின் குண நலன்களைப்பற்றி ஆராயும்போது, மற்றப் பாத்திரங்கள் எவ்வாறு பாராட்டுகின்றன என்பதனையும் பார்க்க வேண்டும். சிலப்பதிகாரக் காப்பியத்தில் கோவலன், மற்றப் பாத்திரங்களால் பலபடப் பாராட்டப்படுகின்றான். "இராமனைப் போலவோ, நளனைப்போலவோ, நீ கைப்பிடித்த மனைவியைப் பிரியவில்லை. பிரியாத வாழ்க்கையினைப் பெற்றிருக்கின்றாய்" என்று கவுந்தி அடிகளால் போற்றப்படுகின்றான். "நான் அறிந்த வரையில் இந்தப் பிறவியில் நீ செய்ததெல்லாம் நல்வினையே" என்று மாடல மறையோனால் புகழப்படுகின்றான். "ஆயர்பாடியில் யசோதை பெற்றெடுத்த கண்ணனைப் போன்றவன்" என்று ஐயையாலும் அவள் தாயாலும் போற்றப்படுகிறான். "நல்லோர்களுக்கு உரிய இலக்கணங்களையெல்லாம் பெற்றவன்" என்று கொலை செய்யவந்த காவலர்களால் பாராட்டப்படுகிறான்.

முடிவுரை :

'மண்தேய்த்த புகழினான்' என்று இளங்கோ அடிகளால் அறிமுகம் செய்யப்படுகிறான் கோவலன். மண்ணும் தேயும்படியான அவனுடைய சிறந்த புகழை, சிலப்பதிகாரம் முழுதும் பரக்கக் காணலாம். சிறந்த காதலனாகவும், நல்ல கணவனாகவும், உன்னதக் கலைஞனாகவும், உயர்ந்த வள்ளலாகவும், திண்தோள் வீரனாகவும் நாம் அவனைச் சிலப்பதிகாரத்தில் காண்கிறோம். அவன் உள்ளத்தில் அன்பு உண்டு; பண்பு உண்டு; காதல் உண்டு; கலை உண்டு; இரக்கம் உண்டு; வீரம் உண்டு; கொடைத் தன்மை உண்டு. இத்தகைய அருங்குணங்கள் பல பெற்றதனால் கோவலன் ஒரு கொடுமைக்காரனாக நம்முன் காட்சியளிக்கவில்லை—குணக்குன்றாகக் காட்சியளிக்கிறான்.

—காஞ்சி பச்சையப்பன் கல்லூரி இதழ்.

இடர்ப்பாடுகளைக் களையத் தயார்

கல்வி மந்திரி உறுதி

தனியார் உயர்நிலைப் பள்ளி நிர்வாகிகள் மகாநாடு : மான்ய உதவி பற்றி கோரிக்கைகள்

இலவச உயர்நிலைப் பள்ளிக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தனியார் உயர்நிலைப் பள்ளி நிர்வாகிகளுக்குத் தோன்றும் இடர்ப்பாடுகளைக் களைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்று தமிழ்நாடு கல்வி மந்திரி திரு. எஸ். மாதவன் இன்று உறுதியளித்தார்.

தமிழ்நாடு தனியார் உயர்நிலைப் பள்ளி நிர்வாகிகள் கழகம் இத்தகைய, இடர்ப்பாடுகளை அரசின் கவனத்துக்குக் கொண்டு வருமாறு கல்வி அமைச்சர் கேட்டுகொண்டார்.

புரசை எம். சிடி. எம். முத்தையா செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் இன்று கழகத்தின் ஏழாவது வருஷாந்திர மகாநாட்டைத் துவக்கி வைத்து அவர் பேசினார்.

மகாநாட்டுத் தலைவர் திரு. கே. சுந்தரம் ஆரம்பக் கல்வி நிலையிலிருந்தே தகுதி வாய்ந்த மாணவர்களை, மேல் படிப்புக்கு அனுப்புவதற்கும், பிறரைத் தொழில் கல்வித் துறைக்கு அனுப்புவதற்குமான முறையைப் பின்பற்ற வேண்டுமென்று வற்புறுத்தினார்.

புரசை எம். ஸி. டி. எம். உயர்நிலைப் பள்ளியில் கூடிய சங்கத்தின் 7-வது வருஷாந்திர மகாநாட்டைத் துவக்கி வைத்து மந்திரி திரு. மாதவன் பேசியதன் கருத்து பின்வருமாறு :—

இலவசக் கல்வித் திட்டத்தின் தகுதிகள் அல்லது தகுதியின்மைகள் பற்றி விவாதிப்பதற்கு ஏற்ற இடமல்ல இது. அரசாங்கத்தின் கொள்கை முடிவுக்கிணங்க கொணரப்பட்ட திட்டமாகும். அங்குமிங்கும் சில சங்கடங்கள் இருக்கக் கூடுமென்பதை ஒப்புக்கொள்கிறேன். அவற்றை அகற்ற அரசாங்கம் தயங்காது;

கல்வி வழங்கும் துறையில், தனியார் நிர்வாகப் பள்ளிகள் முக்கிய பங்காற்றி வந்துள்ளன. பல தனியார் பள்ளியில் அரசு பள்ளிகளை விட நிர்வாகத்திலும், கல்வி போதனையிலும், மாணவர்கள் ஒழுங்காக நடக்கச் செய்வதிலும் திறமையாக நடத்துவதிலும் புகழ் பெற்றுள்ளன. நானே இத்தகைய பள்ளியில் படித்தவன்தான். ஆனால், இம்மாதிரி பள்ளிகள் மிகக் குறைவு.

அதே சமயம் வெறும் வர்த்தக நோக்கத்துடன் தனியார் நடத்தும் பள்ளிகள் உள்ளன. இப் பள்ளிகள் நன்கு ஸ்தாபிக்கப்பட்ட

தரத்தை மீறினால், அவற்றை அகற்ற அரசு தயங்காது. இத்தகைய தவறிழைக்கும் பள்ளிகள் விஷயத்தில் சமூகம் என்ன நடவடிக்கை எடுக்கக் கருதியுள்ள தென்பதைக் குறிப்பிடவில்லை. இதைத் தீர்மானங்களில்சேர்த்திருந்தால் நன்ருக இருக்கும்.

தமிழ் நாட்டில் கல்வியின் தரத்தைச் சீர்திருத்தும் நோக்கத்துடன் கூறப்படும் யோசனைகளை அரசு வரவேற்கும். இதற்குக் கூடுமான வரையில் உதவி புரிய அரசு தயாராக இருக்கிறது. அவர்களுக்கு உதவுவதிலும், சங்கடங்களை அகற்றுவதிலும் மனமார ஒத்துழைக்கத் தயார். ஆனல் நிதி உதவியைப் பொறுத்தவரையில், நிதி பற்ருக் குறையால்தான் உதவி புரிய முடியாமலிருக்கிறது என்ருர்.

தலைவர் உரை

மகாநாட்டுக்குத் தலைமை வகித்து திரு. கே. சுந்தரம் எம்.பி. பேசியதன் கருத்து பின்வருமாறு:

பள்ளிகள் பராமரிப்புக்காக மான்ய உதவிப் பள்ளிகளின் நிர்வாகம் ரு. 1500 கட்டவேண்டுமென்று நிபந்தனை விதிக்கப்படுகிறது. இது நியாயமல்ல. இது அவசியமுமில்லை. நல வசதிக் கட்டணமாக மாத மொன்றுக்கு ஒவ்வொரு மாணவனிடம் ருபாய் ஒன்று வசூலிப்பதற்கு மான்ய உதவிப் பள்ளி நிர்வாகிகளுக்கு அனுமதியளிக்க வேண்டும். மாணவர்கள் கல்வி கற்பதற்குரிய இடமாகப் பள்ளிகளை உருவாக்குவதற்கு இக் கட்டணம் பெரிதும் உதவியாக இருக்கும்.

இலவசக் கல்வி கல்வியே அன்று. 1964-ஆம் ஆண்டுக்குப் பிறகு பள்ளிகளில் ஒழுங்கு குறையத் தொடங்கியதிலிருந்தும், தரம் தேய்வடைந்ததிலிருந்தும் இலவசக் கல்வி பற்றிய என் கருத்து பலமடைந்துள்ளது. தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களை ஒழுங்குபடுத்த வகையறியாது ஆசிரியர்களும், பெற்ருேரும் விழிப்பதிலிருந்து இக்கருத்து உறுதி பெற்றுள்ளது. அங்கீகாரத்துக்குக் கட்டுப்பட்டு சில பள்ளிகளிலாவது கட்டணம் வசூலிக்கும் முறையை அனுமதிக்க வேண்டும். இந்தப் பரீட்சை நடத்திப் பார்ப்பதற்கு ஏற்றதாகும். அடுத்த கல்வி ஆண்டிலிருந்து சம்பளம் வாங்கும் பள்ளியாக மாற்றுவதற்கு என் பள்ளிக்கூடத்துக்கு அனுமதியளிக்க வேண்டுமென்று கோருவதாக இருக்கிறேன். இதற்கு அங்கீகாரமளித்தால், போதனை மான்யம் எதையும் கோரமாட்டேன்.

ஆங்கிலத்தின் அவசியம்

ஆங்கிலம் கற்கும் மொழியாக மட்டுமின்றி, கற்பிக்கும் மொழியாகவும் இருக்க வேண்டும். ஆங்கில போதனையை மந்திரிகள், ஆபீசர்கள், படித்த பெற்ருேர்கள் மட்டுமின்றி, சாதாரண மக்களும் கோருகிருர்கள். அது மட்டுமல்ல; தமிழ்ப் புலவர்களும் விரும்புகிருர்கள்.

பரீட்சைகள்

எஸ். எஸ். எல். சி. விடைத் தாள்களை ஒரே இடத்தில் திருத்துவதென்ற முறையைச் சீரமைக்க வேண்டும். உயர் துவக்கப் பள்ளிகளில் படிப்பு முடிவில் கடினமான பரீட்சை முறை இருக்க வேண்டும். மேல் படிப்புக்குத் தகுதியில்லாத குழந்தைகளை தொழில் கல்விப் பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டும். செகண்டரி கல்விக்குத் தகுதி வாய்ந்தவர்களை மட்டுமே சேர்க்க வேண்டும். செகண்டரி கல்வி முடிவில் மற்றொரு கண்டிப்பான பரீட்சையை ஏற்படுத்த வேண்டும். இதில் முதல் வகுப்பில் முதல் தரமாகத் தேறியவர்களையே கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளவேண்டும். மற்றவர்களைத்தொழில் கல்விக் கூடங்களுக்கு அனுப்பவேண்டும். 14 வயது வரை கட்டாய இலவசக் கல்வி அளிக்க வேண்டுமென்று அரசியல் சட்டம் ஆணையிட்டுள்ளது. இந் நோக்கத்தை ஈடேற்றுகையில், கல்வியின் தரத்தையும் நிலைநாட்டிக் கொள்ளவேண்டும்.

வரவேற்புரை

டாக்டர் எஸ். ஜி. மணவாள ராமானுஜம் தமது வரவேற்புரையில் நிபந்தனையில்லாத நிதி உதவியின் அவசியத்தை வற்புறுத்தினார். உயர்நிலைப் பள்ளிகளில் இலவசக் கல்வி அதன் நிதிப் பொறுப்பு அம்சங்களைப் பரிசீலிக்காமல் கொண்டு வரப்பட்டதென்றார். பள்ளிகளில் எவ்விதம் மூன்று ஆசிரியர்களின் வேலை நேரம் வீணாகிறதென்பதை விளக்கி, இதனால் ஒழுங்குமுறை தவறுகிறதென்று கூறினார்.

ஆசிரியர்களின் ரஜா நாட்களில் வகுப்புகளை கவனிக்கவும், கட்டுரை நோட்டுகள், கணக்கு நோட்டுகளைத் திருத்தவும் உபரி ஆசிரியர்களை நியமிப்பதன் அவசியத்தையும் எடுத்துக் காட்டினார்.

தமிழ் நாட்டில் 2376 உயர் நிலைப்பள்ளிகள் உள்ளன. இப் பள்ளிகளுக்கு ஒதுக்கீடு ரூ. 20·77 கோடி. அதாவது சராசரியில் பள்ளி ஒன்றுக்கு ரூ. 85000 ஆகிறது. அரசு மான்ய உதவி பெறும் பள்ளிகளைவிட அரசாங்க, ஸ்தல ஸ்தாபன பள்ளிகளுக்கு அதிகச் செலவாகிறது. உதாரணமாக நகரில் ஒரு அரசாங்க உயர்நிலைப் பள்ளிக்கு (1500 மாணவர் கொண்டது) செலவு ரூ, 2,72,050 அதாவது ஆண்டுதோறும் ஒவ்வொரு மாணவனுக்கும் 181 வீதம் செலவாகிறது. அதே சமயம் நகரிலுள்ள ஒரு தனியார் உயர்நிலைப் பள்ளி பெறும் அரசு மான்யம் ரூ. 1.70,000 அதாவது, மாணவன் ஒன்றுக்கு ரூ. 151 செலவு. அரசினர் பள்ளிச் செலவுக்கும் தனியார் பள்ளிச் செலவுக்குமிடையில் வித்தியாசம் ரூ. 26. அதாவது 1100 மாணவர்களுக்கு ரூ. 28000. இந்த அதிகப்படிச் செலவை எப்படி ஈடு கட்டுவது என்று, கேட்டார் டாக்டர் மணவாளராமானுஜம். தனியார் பள்ளி நிர்வாகத்தின் முன்னுள்ள பிரச்னை இதுதான். இதற்குத் தீர்வுகாண,

அரசு முன்வரவேண்டும். இங்கிலேயில் மொத்தஆசிரியர் சம்பள உதவி மான்யத் தொகையில் பத்து சத விகிதமோ அல்லது ஆண்டுக்கு மாணவன் ஒன்றுக்கு ரூ. 10 வீதமோ, பராமரிப்புச் செலவு அனுமதிக்க வேண்டுமென்று சங்கம் வற்புறுத்தி வருவதை எடுத்துரைத்தார்.

இலவசக் கல்வி முறை வருவதற்கு முன் தனியார் பள்ளியின் வருவாயையும், இலவசக் கல்வி முறை வந்த பின் இருக்கும் நிலைமையையும் புள்ளி விவரங்களுடன் எடுத்துரைத்தார். பள்ளிக்கூட விளையாட்டு மைதான பராமரிப்புக்குப் பொது மான்யமோ அல்லது விசேஷ மான்யமோ இல்லை என்றும் எடுத்துக் காட்டினார்.

சர்வகலாசாலை கல்விக்கு முக்கிய முன் நிலையாக செகண்டரிக் கல்வி இருந்து வருகிறதென்று கூறிவிட்டு, இதற்குத் தகுந்த கவனமும் உற்சாகமும் கிடைப்பது இல்லை என்றார். ஆரம்பக்கல்வித் திட்டம் முழு அளவுக்கு வகுக்கப்பட்டு, அதற்குப் பொதுஜன ஆதரவைப் பெற்று, சில ஆண்டுகளுக்குச் செயல்படுத்தி, ஸ்திரப்படுத்தும் வரையில் செகண்டரி கல்வி சீரமைப்புப் பற்றி தனியாக முயலக்கூடாது என்று கூறினர்.

சங்கக் காரியதரிசி திரு.கே.எஸ். பழனிச்சாமி ஆண்டறிக்கை படித்தார்.

எம். ஸிடி. எம். முத்தையா செட்டியார் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் திரு. எஸ். நரசிம்மன் தனியார் பள்ளிகள் பெறும் மான்யங்கள் செலவினங்கள் பற்றிய புள்ளிவிவரங்களைச்சமர்ப்பித்து இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துரைத்தார்.

தீர்மானங்கள்

தனியார் பள்ளிகளின் பண முடையை அகற்ற வேண்டும் என்று மகாநாடு கோரியது. பள்ளிகளை நடத்துவதில் நிர்வாகத்துக்குஏற்படும் எல்லாச் செலவினங்களையும் ஒத்துக் கொள்ள வேண்டும். அல்லது ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர் சம்பளம், கிராக்கிப்படி முதலியவற்றுக்காக அரசு தரும் மான்யத் தொகையில் 10 சதவிகிதம் பராமரிப்புச் செலவுக்காகத் தரவேண்டும் அல்லது ஒவ்வொரு மாணவனுக்கும் பருவம் ஒன்றுக்கு ரூ 5 வீதமோ, அன்றி ஆண்டுக்கு ரூ. 10 வீதமோ கட்டணம் விதித்து வசூலிக்க அனுமதிப்பது அல்லது ஒவ்வொரு மாணவனுக்கும் ரூ. 10 வீதம் மான்யம் வழங்குவது அல்லது இப்போதைக்கு ஒவ்வொரு மாணவனிடமும் மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் பராமரிப்புச் செலவுக்காக வசூலிக்க அனுமதிக்க வேண்டும்.

தனியார் உயர் நிலைப்பள்ளிகளில் ஆசிரியர்கள், குமாஸ்தாக்கள், பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி சாங்ஷன் செய்யுமாறு அரசாங்கத்திடம் கோர முடிவு செய்தது.

புது பள்ளிகள், ஆரம்பிக்க ரூ. 35,000க்கு மேல் கட்டளை வைக்க வேண்டுமென்ற நிபந்தனை

யை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொண்டது.

தனியார் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், குமாஸ்தாக்கள் பணியாளர்களுக்கு அரசு ஊழியரைப் போன்று வைத்திய சலுகைகளை விஸ்தரிக்குமாறு கோரப்பட்டது. குமாஸ்தாக்கள் பணியாளர் ஊதியங்கள் வெட்டை ரத்து செய்யக் கோரியது.

பள்ளிகளில் ஆசிரியர்களல்லாதாருக்குப் பென்ஷன் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்றும் கோரியது.

இலாகாவின் அங்கீகாரத்துக்குக் காத்திராமல் பள்ளிகளில் உபரியாக உள்ள தொகைகளிலிருந்து செலவழிக்க அனுமதிக்க வேண்டுமென்று கோரும் தீர்மானம் நிறைவேறியது.

விஞ்ஞான விருப்பப் பாடத்துக்கு வழி செய்துள்ள பள்ளிகளில் விஞ்ஞானச் சாதனங்கள் வாங்குவதற்குக் குறைந்தபட்சம் ரூ 5000 வழங்குமாறு கோரியது.

ஒவ்வொரு 12 வகுப்புப் பிரிவுக்கும் ஒரு அதிகப்படி ஆசிரியரை அமர்த்துவதற்கு அனுமதி வேண்டுமென்று கோரியது.

ஆறாவது முதல் எட்டாவது படிவம் வரையில் தமிழ் வகுப்புகளை தமிழ்ப் புலவர்களும், ஆங்கில வகுப்புகள் பி. டி. பட்டதாரி ஆசிரியர்களும்தான் நடத்த வேண்டுமென்று உத்திரவிடக் கோரியது.

முக்கிய அறிவிப்பு

1969-70-ஆண்டுக்கு தொடர்ந்து எமது பாடப்புத்தகங்களை வைத்த எய்டட் ஆரம்பப் பாடசாலை(Aided Ellementary Schools) களுக்கு மட்டும் தொடர்ந்து "ஆரம்பக்கல்வி" இனமாக அனுப்பிவைக்கப்படும். மற்றவர்கள் ரூ. 5/- சந்தா அனுப்பினாலன்றி பத்திரிகை அனுப்பப்படமாட்டாது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

குறைந்தது ரூ. 100க்குக் குறையாமல் ஆர்டர்கள் அனுப்ப வேண்டும். ஆர்டர்கள் அனுப்பும்பொழுது, பார்சல் அனுப்ப வேண்டிய (Railway Station) ரயில்வே நிலையத்தின் பெயர், அல்லது (T.V.S. Lorry) நிலையத்தின் பெயர் தெளிவாக எழுதவேண்டும். *மானேஜர்,*

ஆரம்பக்கல்வி நிலையம்

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்,

94-95, புதுத்தெருவு, மண்ணடி, சென்னை-1.

நீலமலைப் பிராந்தியம்

பிலோ இருதயநாத்

*

வெகுகாலத்திற்கு முன்பிருந்தே இந்த நீலகிரி (நீலமலை) இப்பெயருடன்தான் இருந்துவருகிறது. அதிகக் குளிராய் இருந்தபடியால் யாரும் இந்த மலை நாட்டை விரும்பவில்லை. காலம் செல்லச் செல்லச் சீதோஷ்ண நிலை சமப்பட்ட பிறகு மக்கள் இங்கு வந்து குடி புகுந்தார்கள்.

போர்த்துக்கல் தேசத்துப் பாதிரிமார்கள், ஜெசியூட் அல்லது ஜேசு சபைப் பாதிரிமார்கள் 16 ஆம் நூற்றுண்டில் இங்கு வந்தார்கள். அச்சமயம் நீலகிரி மைசூர் அரசரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தது. 17-ஆம் நூற்றுண்டில் ஹைதர்-திப்பு ஆகிய முகம்மதிய அரசர்களின் கீழ் இருந்தது. இதற்கு அநேக சரித்திரச் சான்றுகள் இருக்கின்றன.

மேல்குந்தா (இங்கு இப்போது அணைக்கட்டு கட்டியிருக்கின்றனர்) கிராமத்தில் திப்வால் கைதிகள் அடைக்கப்பட்ட சிறையில் அழிந்த பல பாகங்கள், "ஜெயில், தோட்டம்" என்ற பெயரில் இருக்கின்றன. 'உலிக்கல்' மலைக்குப் பக்கத்திலுள்ள "டுருக்" என்னும் மலைக்கோட்டையையும் இன்னும் காணலாம். 1799-ஆம் ஆண்டு நீலகிரி ஆங்கிலேயருடைய ஆட்சிக்கு உட்பட்டாலும், அடிவாரத்தில் ஏற்படும் மலைக்காய்ச்சலுக்குப் பயந்து ஒருவரும் அங்கு செல்லவில்லை. 1818-ஆம் ஆண்டு வரை இந்த இடத்தைப் பார்வையிட யாரும் செல்லவில்லை. கோவை ஜில்லா உதவி கலெக்டர்கள் உஷ், கிண்டர்ஸி என்னும் இருவர் நீலகிரிக்குச் சென்றதாகச் சரித்திரம் கூறுகிறது. புகையிலையைக் கள்ளத்தனமாக விற்பனை செய்கின்றவர்களைப் பிடிப்பதற்கோ அல்லது வேட்டையாடவோ அல்லது நாடுகளைப் பார்ப்பதற்கோ அவர்கள் சென்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அவர்கள் (சிறு முகை) ஸ்ரீமுகை வழியே கோத்தகிரி சென்றுர்கள். பிறகு நீலகிரியைப் பற்றிய செய்திகளைக் கலெக்டர் திரு சால்வனுக்குத் தெரியப்படுத்தினுர்கள்.

ஆகையால் அவர்கள் 1819-இல் ஒரு சிறு கூட்டத்தாருடன் தனநாய்க்கன் கோட்டை வழியாக-தேனுடு சென்று கோத்தகிரிக்குச் சமீபமாய் உள்ள "திம்பட்டி" என்னும் இடத்தில் கூடாரம் போட்டார்கள். மேட்டுப்பாளையத்து அடிவாரம் போல மலைக்காய்ச்சல் உள்ள இடமாக இல்லாமல் சுகமான இடமாக இருப்பதைக்கண்டு சால்வன் துரை திம்பட்டியில் தங்குவதற்கு ஒரு பங்களாவைக் கட்டியுள்ளதைஇன்றும்காணலாம். அது இன்று மூடி இருக்கிறது. "பங்களா"' என்பது ஒரு பெரிய மோட்டார் 'செட்டு

போல் இன்று காட்சி அளிக்கிறது. பிறகு சால்வன் துரை தம் வசதியை முன்னிட்டுச் சிமுகை–திம்ப பட்டி வரை பாதை அமைத்துச் சீர்திருத்தம் செய்யக் கம்பெனியாரின் உத்தரவு பெற்றுர். பிறகு சேலம்-கோவை முதலிய இடங்களிலிருக்கும் ஜெயில் கைதிகளைக் கொண்டு நல்லதோர் பாதை அமைத்தார். அதன் பின்னர் சென்னை அரசாங்கத்தாரிடம் எழுதி ஆங்கிலேயர்களுக்கு ஏற்ற கோடை வாசஸ்தலம், ''நீலகிரி'' என்றும், அதற்கு ஏற்ற வசதிகள் செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். முதல் முதலில் கோத்தகிரியிலும், திம்பட்டியிலும் பெரிய பெரிய பங்களாக்கள் கட்டிச் சில ஆங்கிலேயர்கள் குடியிருந்தார்கள். அந்த ஆங்கிலேயர்களுக்குப் பணிவிடை செய்யச் சில பணியாளர்களும் அங்கே குடி புகுந்தார்கள். அந்த ஆங்கிலேயர்களில் சிலர் சுமார் இருபது மைல் தூரத்திலிருக்கும் உதகை மண்டலத்தையும் போய்ப் பார்த்து வந்தார்கள். பிறகு, சாலவன் துரையே உதகையைப் பார்வையிட்டு, உதகையில் முதன் முதலில் 1818-இல்; ஒரு கல் பங்களாவையும் பல கட்டிடங்களையும் கட்டுவித்தார். சிங்காரத் தோட்டத்தையும் அமைத்தார்.

பெயர்க் காரணம்

பீடபூமிப் பக்கங்களில் இருந்து பார்ப்பதற்கு இந்த மலை நீலநிறமாகத் தோன்றியதால் இதற்கு ''நீலகிரி'' என்ற பெயர் ஏற்பட்டதாகும். நீலகிரி சுமார் 35 மைல் நீளமும், 20 மைல் அகலமும், சுமார் 7000 அடி உயரமும் உள்ளதாகும். மேற்குத் தொடர்ச்சி மலையும், கிழக்குத் தொடர்ச்சி மலையும் ஒன்று சேருமிடத்தில் ''நீலகிரி'' உள்ளது. இது தமிழ்நாட்டில் உள்ள எல்லா ஜில்லாக்களையும்விட மிகச் சிறியது. இதன் விஸ்தீரணம் 957 சதுர மைல். நீலகிரியின் ஜனத்தொகை 1951ஆம் ஆண்டு 3,11,729 பேர் இருந்தார்கள். 1961ஆம் ஆண்டு 4.09,440. இந்த பத்து ஆண்டில் அதிகம்: 97,711. நீலகிரியின் தலை நகரம் உதகை மண்டலம். இன்று சென்னை அரசாங்கத்தார்களுக்குக் கோடை வாசஸ் தலமாக அமைந்திருக்கின்றது. இங்குச் சென்னைக் கவர்னர் கோடை காலத்தில் வந்து தங்குகிறுர். மேலும் இங்குப் பல சுதேச மன்னர்களின் பங்களாக்களும் இருக்கின்றன. மேற்குத்தொடர்ச்சி மலையிலுள்ள சிகரங்களில் மிகவும் உயரமான சிகரம் ''தொட்டபெட்டா''. இது உதகைக்குக் கிழக்கில் சமுத்திரமட்டத்திற்கு மேல் 8.760 அடி உயரத்தில் உள்ளது. ஆனை முடிச்சிகரம் என்பது இந்த மலைக்குத் தெற்கில் திருவாங்கூரைச் சார்ந்த பகுதி. உயரமான சிகரம் தவிர, 8299 அடி, உயரமுள்ள சிநேடென் சிகரமும், 8030 அடி உயரமுள்ள எல்க் குன்றுகளும் உதகை மண்டலத்தில் உள்ளன. உதகை மண்டலத்தில் 7228 அடி உயரத்தில் ஓர் ஏரி எழில் மிக்க காட்சி அளிக்கிறது. மேலும் நீலகிரியில் பல அழகிய நீர் வீழ்ச்சிகள் இருக்கின்றன. அவைகளுள் 250 அடி உயரத்தில் உள்ள ''காத்த

ரீன்" நீர் வீழ்ச்சியும், 180 அடி உயரத்தில் உள்ள "காட்டேரி" நீர் வீழ்ச்சியும், 400 அடி உயரத்தில் உள்ள "கொலக்கம்பை" நீர் வீழ்ச்சியும், 7512 அடி உயரத்தில் உள்ள "பாய்க்காரர்" நீர் வீழ்ச்சியும் முக்கியமானவை.

நீலகிரி மாவட்டம் 1799-ம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனியாருக்குக் கொடுக்கப்பட்டது. நீலகிரி ஆங்கிலேயர்கள் திப்பு சுல்தானோடு மைசூர் போர் செய்த பின் அது கிடைத்தது. நீலகிரி 1799-ம் ஆண்டு கிடைத்தாலும், 1819 ஆம் ஆண்டுவரை எந்த ஐரோப்பியரும் நீலகிரிக்குச் சென்று தங்கவில்லை. 1913-ஆம் ஆண்டு முதன் முதலாக சில ஆங்கிலேயர்களும், அவர்களுக்கு உதவியாக சர்வேயர்களும், ரெவரண்ட் வில்லியம் கேஸ் என்பவரும் அவருக்கு உதவியாக மாக்மாஹோ என்பவரும் நீலகிரி அடிவாரப் பீட பூமியில் சென்று தங்கினார்கள். 1819-ஆம் ஆண்டு மே மாதம் திரு. சால்வன் துரை இருபது நாட்கள் நீலகிரியில் தங்கினார். அதனால் அவர்தாமே உதகை மண்டலத்தை முதலில் கண்டு பிடித்ததாகக் கூறிக்கொண்டார். காரணம் அதிகாரம் அவர் கையில் இருந்ததே. ஆனால் நீலகிரியைப் பற்றி சங்ககால நூல்களில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சேரன் செங்குட்டுவன், நீலகிரி மலையில் பாடி தங்கினான் என்றும், அந்த ஆங்கிலேயனுக்கு எப்படித் தெரியும்? மேலும் அதை எடுத்துக் கூற தைரியமான தமிழன் ஒருவன்கூட அன்று இல்லை போலும்?

கல் பங்களா

உதகையில் தங்க ஏற்பட்ட பின் 1822-ம் ஆண்டு "கல் பங்களா"வைச் சால்வன் துரை கட்டினார். தற்காலத்தில் அது அரசாங்க அலுவலகமாக உபயோகப்படுகிறது.

சால்வன் துரையின் ஊக்கத்தாலும், உழைப்பாலும் தன்னம்பிக்கையாலும் உதகை மண்டலம் நீலகிரியின் தலை நகரமாகவும், அரசாங்கத்தார்க்கு கோடை வாசஸ்தலமாகவும் உபயோகப்படுகின்றது. 1824-ம் ஆண்டு சால்வன் துரை அரசாங்கத்தாரின் உத்திரவு பெற்று உதக மண்டலத்திலுள்ள ஏரியை வெட்டினார். 1826-ஆம் ஆண்டு சர். தாமஸ் மன்றோ என்ற கவர்னர் முதன் முதலாகக் "கல் பங்களாவில்' சால்வன் துரையைச் சந்தித்தார். சர். தாமஸ் மன்றோ 1827-ம் ஆண்டு கர்நூலில் மரணமடையவே, கனம் ஸ்டீவன்ராம் போல்ட் வாஷிங்டன் என்பவர் அதிகமாக உழைத்து உதகையை ஏற்ற வாசஸ்தலம் ஆக்கினார். 1829-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ம் தேதி வாஷிங்டன் உதகையில் நடக்கும் காரியங்களைக் கவனித்தார். அப்பொழுது ஸெயிண்ட் ஸ்டீவன்ஸ் கோயிலுக்கு அடிக்கல் நாட்டினார். ஆகையால், அக்கோவிலுக்கு அப்பெரியாரின் பெயரே வைக்கப்பட்டது. அந்தக்

கோயிலுக்கு வேண்டிய உயர்ந்த ரக உத்தரங்கள், தூண்கள், முதலியவைகள் எல்லாம் திப்பு சுல்தானது ஸ்ரீரங்கப்பட்டண அரண்மனையிலிருந்து கொண்டு வரப்பட்டன. அத்தூண்கள் யாவும் உயர்ந்த தேக்கு மரத்தால் செய்யப்பட்டவை. பிறகு, அதன் மேல் பலவித வர்ணங்கள் பூசப் பட்டதால் இன்று அவை உயர்ந்த கற்களைப் போல் தோன்றுகின்றன. அதன் செலவு ரூ. 8000க்கு அதி கப்படக் கூடாதென்றும் உத்தரவு வந்தது. ஆனால் 1831-ஆம் ஆண்டு வரை ரூபாய் 24,000 அரசாங்கம் செலவு செய்தது. உதகை சிங்காரத் தோட்டத்திற்கு மேலி ருக்கும் அரசாங்கப் பங்களா கட்டிமுடிக்க நான்கு ஆண்டுகள் ஆயின. கட்டடச் செலவான தொகையோ ரூபாய் 7,80,000. 1867ம் ஆண்டு அர்ச் தாமஸ் கோவிலை ரூ. 63,000 செலவு செய்து கட்டினார்கள். அப்போது சென்னை-கவர்னராக இருந்த வில்லியம் பாட்ரிக் ஆதாம் உதகை யில் இறந்து விட்டதால் செயின்ட் தாமஸ் கல்லறை மயானத்தில் அவர் உடலைப் புதைத்தார்கள்.

நீலகிரியில் மேட்டுப் பாளையத் திலிருந்து குன்னூர் வரையிலும் 49 லட்சம் ரூபாய் செலவு செய்து 1889 ஆம் ஆண்டு ரயில் பாதை போடப்பட்டது. நீலகிரியில் மூன்று தாலூகாக்கள் இருக்கின்றன. (1) உதக மண்டலம். (2) குன் னூர் (3) கூடலூர். (இது உதகையிலிருந்து 32 மைல்கள் உள்ளது) உதகையில் முதன் முதலில் வசித்த ஆங்கிலேயர் சாலிவன் துரை அவர்கள்தான். உதகையிலிருக்கும் கல் பங்களா 1827 - 1834 வரையில் ஐரோப்பிய சேனதிபதி, உடல்நிலை சிர் குலைந்த வர்கள் ஆகியோருக்கு ஓய்வு நேர விடுதியாக உபயோகப்படுத்தப் பட்டது. 1845 ஆம் ஆண்டு சமை யலுக்கு காய்கறித் தோட்டமாக ஆரம்பித்த "கவர்ன்மென்ட் சிங்காரத் தோட்டம்" அக்காலத் தில் காய்கறிகள் பயிரிட்டு ஐரோப் பியர்களுக்கு நியாயமான விலைக் குக் கொடுப்பதற்கு, ஏற்பாடா னது. அக்காலத்தில் சென்னை கவர்னரா யிருந்த வீஸ்டு விட்டேல் என்பவர் தம் சொந்தப் பணத்தில் ரூபாய் ஆயிரம் கொடுத்து விஞ்ஞா னத்தில் தேர்ந்த ஒரு தோட்டக் காரனை நியமித்து அதனைக் கவ னித்து வந்தார். அன்று அந்த நிலம் சதுப்பாகவும் காட்டுப் பிராணிகள் வசிக்கும் இடமாகவும் இருந்தது. அதைச் சீர்படுத்தி இப்பொழுதுள்ள அழகான தோட் டமாகச் செய்தார். இன்று இத் தோட்டம் உதகை கலெக்டரின் மேற்பார்வையில் இருக்கிறது.

இந்தச் சிங்காரத் தோட்டத் திற்கு மேல் பகுதியில் "கவர்ன் மெண்ட் பங்களாவை" 1877ம் ஆண்டு டியூக் பக்கிங்காம், சென்னையில் கவர்னராக இருந்த போது கட்டினர். 1878ஆம் ஆண்டு அவரே அங்கு சென்று தங்கினர். அதில் உள்ள சாமான் களும் கட்டடச் செலவும் சேர்த்து ரூ. 7,80,000 செலவானதாம். பிறகு சர். ஆர்தர் ஆவ்லக் என்பவ

ரால் பால் ரூம் (Ball-room) என்றதோர் அறையை 1900ம் ஆண்டு ரூ. 6,000 செலவில் கட்டினார். செயின்ட் ஸ்டீவன்ஸன் கோவிலில் 1930ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ம் தேதி கல்கத்தா அத்தியக்ஷகர் டர்னர் என்பவரால் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

வாத்தியப் பெட்டி

இந்தக் கோவிலில் ரூ. 6750 பெறுமான ஒரு வாத்தியப் பெட்டி இருக்கிறது உதகை மண்டலத்திலிருந்து வடகிழக்கே ஆறுமைல் தூரம் நடந்தால் "துனேரி" என்றதோர் படகர்களுடைய புராதனமான கிராமத்தை அடையலாம். அங்கு "ஆம்லட் அனிக்கோரி" என்ற கல் பாம்பு ஒன்று இருக்கிறது. அதன் நீளம் 10 அடி. அகலம் ஓர் அடி. ஏதோ ஒரு பாம்பு ஏதோ ஒரு விசேஷமான நாளில் கல்லாக மாறியதாகக் கூறப்படுகிறது. மோயர் பள்ளத்தாக்கில் "எல்பநாத்" என்னும் குடிசை காட்டிற்குள் இருக்கிறது. அந்த ஊர் "ஹலியட்டி" என்பதாம். அங்குள்ள நீர்வீழ்ச்சிக்கு "குதிரை ஆலா" என்பது பழைய பெயர். ஆங்கிலேயர்கள் நீலகிரிக்கு வந்தபின் அந்த நீர்வீழ்ச்சிக்கு "காத்தரீன் வாட்டர் பால்ஸ்" என்று பெயர். அந்த நீர்வீழ்ச்சியைப்பற்றி ஒரு கதை கூறப்படுகிறது. அதாவது, ஒரு படகர் தம் மனைவி தனக்கு முதல் தரமான ஆகாரத்தைப் பரிமாறி விட்டுத் தன் சகோதரனுக்கு இரண்டாம் தரமான ஆகாரத்தைப்பரிமாறியதால் அந்த அவமானம் தாங்காதவனாய் குதிரையின் மேல் சவாரி செய்தவாறே அந்த நீர்வீழ்ச்சியில் விழுந்து மடிந்தாராம்.

உதகையிலிருந்து 13 மைல்தூரத்தில் "காண்டாஸ்" என்ற அடிவாரத்தில், "அவலான்ச்" என்ற இடம் இருக்கிறது. அங்கு ஒரு முசாபரி வீடும், ஒரு சத்திரமும் பணியாட்களுக்காக இரண்டு வீடுகளும் இருக்கின்றன. இங்கு உள்ளவர்கள் இந்த ஓடையில் மீன் பிடிக்கின்றனர். உதகையிலிருந்து சுமார் 8 மைல் வடக்கில் "கல்லட்டி" என்ற கிராமம் இருக்கிறது. கல்லட்டிக்கு ஒன்றரை மைல் தூரத்தில் பாழடைந்த ஒரு மலைக்கோட்டை இருக்கிறது. கல்லட்டி ஒரு சிற்றரசனுக்குக் கீழ்ப்பட்டு இருந்ததாயும், திப்பு சுல்தான் காலத்தில் அதைக் கைப்பற்றியதாகவும் சரித்திரம் கூறுகிறது.

வெடி மருந்து சாலை

நீலகிரி குன்னூரிலிருந்து சுமார் 3 மைல் தூரத்தில் "அரவன்காடு" உள்ளது. இங்குப் பலவிதமான வெடி மருந்துகள் தயார் செய்யும் பாக்டரி இருக்கிறது. இதற்குள் யாரையும் உள்ளேபோக அனுமதிப்பதில்லை. நீர்வீழ்ச்சியின் ஹயிட்டோ மின்சார சக்தியால் மேற்படி பாக்டரியில் வேலை நடைபெறுகிறது. குன்னூருக்கு அருகே 600 அடி உயரத்தில் "உலிகல் மலை" என்ற ஒன்று உண்டு. இங்குப் பாழடைந்த கோட்டை

ஒன்று உண்டு. இதற்கு அருகில் உள்ள கிராமத்திற்கு ''உலிக்கல்'' என்ற பெயர் கொடுக்கப்பட்டது. இதற்கு ஒரு கதையும் உண்டு.

வெகு காலத்திற்கு முன் புலியைப் போன்ற ஒரு மிருகம் மனித இனத்தவரைக்கொலை செய்து சாப்பிட்டு வந்ததாம். அதைத் தைரியமுள்ளவன் ஒருவன் கொன்று அதைப் புதைத்த இடத்தில் மூன்று கற்களை வைத்தானும். அந்தக் காரணத்திற்காக இந்த இடத்திற்கு ''உலிக்கல்'' அல்லது 'புலிக்கல்' என்ற பெயர் வந்ததாம். பண்டைக் காலத்தில் இந்த மலையில் ''பக்கா அசுரன்'' என்ற அசுரன் வசித்து வந்தானும். அந்த அசுரனுக்குப்பக்கத்திலிருக்கும்கிராமத்தினர் தினமும், ஒரு மனிதனும் ஒரு வண்டிச் சோறும் கொடுத்து வந்ததாயும், அந்தச் சமயத்தில் தான் பஞ்சபாண்டவர்களில் ஒருவனை பீமனுடைய முறை வந்ததாயும், பீமன் ஒரு வண்டிச் சோற்றுடன் பக்காசூரன் மலைக்குப் போகும்போது, எல்லாவற்றையும் தானே சாப்பிட்டு விட்டதால் கோபமடைந்த பக்காசூரன் சண்டைக்கு நின்றதாயும், இருவருக்கும் மல்யுத்தம் நடக்க கடைசியில் பக்காசூரன் இறந்ததாயும், பக்காசூரன் சாகும்போது, ''இங்குள்ளவர்கள் விஷக் காய்ச்சலால் சாகட்டும்'' என்று சபித்தானும். அன்று முதல் இன்று வரை அதனுல்தான் அந்தப்பக்காசுரன் மலைப் பகுதியில் விஷக் காய்ச்சல் பரவி இருக்கிறது என்றும் சிலரால் கூறப்படுகிறது.

''மூக்கறுத்தி மலை'' 8380 அடி உயரத்திலுள்ள உன்னத சிகரம். இந்த மலை பார்வைக்கு விநோதமான ரூபமுடையதாகக் காணும். இம்மலைக்கு கன்னட மொழியில் ''அறுமூக்கு'' என்று பெயர். இது சம்பந்தமாக இரு புராணக் கதைகள் கூறப்படுகின்றன.

(1) இலங்கைத் தலைவனை இராவணனுக்கு பீடபூமியிலிருந்தவர்கள் குறைவாக வரிப்பணம் கொடுத்தனர். ஆகையால் கோபம் கொண்ட இராமருடைய நண்பர்களான அவர்களிடம் இராவணன் பகை கொண்டான். அப்போது இராவணனுடைய தங்கையான இரங்கேஸ்வரி அந்த மக்களை சபித்தாள். மண்ணை வாரி இறைத்தாளாம். உடனே அந்த மக்கள் இருவிதமான புழுக்களாக மாறி விட்டனராம். இதை அறிந்து ராமர் கோபித்து இரங்கேஸ்வரியுடைய மூக்கை அறுத்து அதை எல்லோரும் பார்க்கும்படி மலைமேல் வைத்ததாயும் கூறப்படுகிறது. அந்த மூக்குதான் இந்த மலை என்பர் சிலர்.

(2) பழைய காலத்தில் பெண் குழந்தைகளைக் கொல்லும் பழக்கம் தோதுவர்களிடையே இருந்ததாயும், ஒரு தோதுவப்பெண், தான் பெற்ற ஒரு பெண்குழந்தையைக் கொல்லாமல் வைத்திருந்ததால் அவள் கட்டளையை மீறினுள் என்று அவள் மூக்கை அறுத்ததாயும், அதுவே இப்போது சிகரமாகத் தோன்றுகிறதாயும் மற்றொரு கதை கூறப்படுகிறது.

தவலா (தவளைக் கோட்டை) உதகை-கூடலூரிலிருந்து (கூடலூர் தாலுக்கா) சுமார் 10 மைல் தூரத்தில் உள்ளது. 1879-1882-இல் இங்கு வெட்டி பொன் எடுத்தார்கள். இதற்கும் ஒரு கதை கூறப்படுகிறது.

(3) வய நாட்டிலிருந்து குறும்பிரநாத் என்ற அரசன் அநேக வீரருடன் "தவலா" என்ற இடத்திற்கு வந்தானும். (இங்கே செல்ல மைசூர் மார்க்கம் வசதி) அங்கு வேதாஸ் (வேடர்கள் அல்லது வேதர்கள்) என்னும் மக்கள் தங்களுடைய தலைவனுடன் வாழ்ந்து வந்தனர். குறும்பிரநாத் அரசன் சேனையுடன் இவர்கள் (வேதாஸ்) பொன் சேர்த்து வைத்திருந்த இடத்திற்கு வந்து எடுக்க முயற்சி செய்தான். "வேதாஸ்" என்ற மக்கள் தாங்கள் சேர்த்து வைத்த பொக்கிஷங்களைச் செப்புத் தவலைகளில் போட்டுச் சுனிக்குளத்தில் மறைத்து விட்டனர். பிறகு குறும்பிரநாத், "வேதாஸ்" மக்களைக் கொன்றுவிட்டானும். தப்பிய சிலர் மைசூருக்கும் நீலம்பூர் காடுகளுக்கும் ஓடிவிட்டனர். பிறகு குறும்பிரநாத் "வள்ளுனவர்" என்பவருக்கு இந்த நாட்டைக் கொடுத்துவிட்டுப் போய் விட்டான். அநேக ஆண்டுகளுக்குப் பிறகு வள்ளுனவர் மூன்று பூஜை செய்து எல்லா மக்களுக்கும் விருந்து வைத்துப் பிறகு யானைகளுடன் சுனிக் குளத்திலுள்ள பொக்கிஷங்களோடு தவலையை எடுக்க முயற்சி செய்தான். தண்ணீருக்கு மேல் கொண்டுவரப் பட்ட தவலை, தவறி விழுந்துவிட்டது. மூடி மட்டுமே கிடைத்தது. உடனே மழையும் புயலும் வரவே யாவரும் ஓடிவிட்டனர்.

அன்றிரவு இந்த சுனிக்குளத்துக்குச் சென்ற அனைவரும் இறந்துவிட்டனர். அன்று முதல் பொன் எடுக்கமுயற்சி செய்பவர்கள் இறந்துவிடுகிறார்கள் எனக் கூறப்படுகிறது.

—"தினமணி சுடர்"

வில்வப் பழம்

பி. எல். சௌதுரி

●

பொதுவாக நம் உணவில் பல சத்துக்கள் குறைவாக இருக்கின்றன. இந்தக் குறையை ஈடு செய்யக்கூடிய பழ வகைகளை நாம் அடிக்கடி சேர்த்துக்கொள்வதில்லை. காரணம் அவற்றின் விலைவாசி அதிகமாக இருப்பது தான். அநேகம் பேருக்கு என்ன அபிப்பிராயம் தெரியுமோ? ஆப்பிள், திராட்சை, ஆரஞ்சு இவை போன்ற பழங்கள் தாம் உயர்ந்த சத்துள்ளவை என்று எண்ணுகிறார்கள். இது உண்மை ஆகாது. உள்ளூரிலேயே எத்தனையோ பழங்களில் இந்த மாதிரி சத்து இருக்கிறது. அப் பழங்கள் சர்வ சகஜமாக எங்கும் கிடைக்கக் கூடியவை. அவைகளில் ஒன்று வில்வப் பழம்.

இதை இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் காணலாம். மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஹோஷாங்காபாது ஜில்லாவில் ஒவ்வொரு கிராமத்தில் குறைந்தது இரண்டு வில்வ மரமாவது இருக்கும். யாரைக்கேட்டாலும் இந்தப் பழத்தைச் சும்மா தருவார்கள்.

இதைத் தோட்டத்தில் சகஜமாக நட்டு வளர்ப்பதில்லை. ஆனால் இந்த மரம் பெரிய தோட்டங்களில் இருப்பது நல்லதே. விதையை நட்டாலே போதும். ஜூன், ஜூலை மாதத்தில் பழுத்த பழுத்தின் விதையைப் போட்டால் விசேஷம். அடுத்த வருஷத்தில் ஓரளவு உயரம் வந்ததும் தரத்துக்குத் தக்கபடி 30, 35 அடி தூரத்துக்கு விட்டு விட்டு நட்டு விட வேண்டும்.

ஆப்பிள், மாதுளை இந்த இரண்டில் இருக்கும் அளவு சத்து இதிலும் உண்டு. இவற்றிலுள்ள சத்தின் தராதரம் கீழே குறிக்கப் பட்டுள்ளது.

கோடை காலம் முழுவதும் வில்வப் பழம் கிடைக்கும். சர்பத் பண்ணிச் சாப்பிட்டால் உடம்புக்கு மிகவும் குளிர்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும். அஜீரணம் முதலிய வயிற்றுக் கோளாறுகளுக்குக் காயிலிருந்து பருப்பை எடுத்துச் சுட்டுச் சாப்பிட்டால் உடனே கேட்கும். விடாத சீத பேதி, மந்த பேதி இவைகளுக்கும் இது ஒரு மருந்தாகப் பயன்படும். இந்தச் சந்தர்ப்பங்களில் ஜுரமாக இருந்து, உடல்நிலை பலவீனமாக

இருந்தாலும் பரவாயில்லே. இதை உபயோகிக்கலாம். பழுக்காத நிலேயிலும் பாதி பழுத்த நிலே யிலும் உள்ள வில்வக் காய் மண மாகவும் இருக்கும். ஜீரணமும் எளிதில் ஆகும்: உஷ்ண உடலுக் குக் குளிர்ச்சி தரும். குடலேச் சரி படுத்திச் சரிவர மலம் சுத்தியாகும் படி செய்யும் குணம் இதற்கு உண்டு.

பழம்	புரதச் சத்து	கார்போஹைட்ரேட்ஸ் அவுன்ஸ் ஒன்றில்	கொழுப்பு	கலோரி என்ற உஷ்ணம்
வில்வம்	0·18	9·5	0·2	20·8
ஆப்பிள்	0·11	2·19	—	9 2
மாதுளே	0·18	0·19	—	9·0

—"கிராம ராஜ்யம்"

புதுமுறை சங்க வாய்பாடு

V. K. சேஷாத்திரி, B.A., L.T.

(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலே ரூ. 0–13 ந. பை. 100 வாய் பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. [illegible] வீதம் கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

தமிழ்நாடு தனியார் உயர்நிலைப்பள்ளி நிர்வாகிகள் கழகம்

(பதிவு பெற்றது)

ஏழாவது ஆண்டு மாநாடு

●

திரு. K. L. பழனிசாமி, B.A., L.T.,

(முன்னாள் ஜில்லா கல்வி அதிகாரி)

செயலாளர் அறிக்கை

*

மாண்புமிகு அமைச்சர் அவர்களே !

தலைவர் அவர்களே !

நண்பர்களே !

வணக்கம்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த மாநாட்டைத் தொடங்கி வைக்க இசைந்தமைக்கு முதற்கண் என் நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

தலைவர் அவர்கள் தலைமை தாங்கி நடத்த முன் வந்ததற்கும், பல இடங்களில் இருந்து இங்கு வந்துள்ள உங்கள் அனைவருக்கும் என் நன்றியையும், வணக்கத்தையும் செலுத்திக்கொண்டு மகிழ்ச்சியுடன் இவ்வறிக்கையை உங்கள்முன் வழங்க முற்படுகின்றேன்.

இதற்கு முன்பு நடந்த மாநாடு 1967 ஜுலை 8-ம் நாளன்று, இதே சென்னையில் நடந்தது. அம்மாநாட்டை அப்போதிருந்த கல்வி அமைச்சர் தான் தொடங்கி வைத்தார். அப்பொழுது, அமைச்சர் அவர்கள், "தனியார் உயர்நிலைப்பள்ளி நிருவாகிகள் கழகத்தின் உறுப்பினர்களையும், கல்வித்துறையில் பணிபுரியும் அலுவலர்களையும் ஒரு சேரக் கூட்டி 'இடர்ப்பாடுகள் என்னென்ன? அவற்றைக் களைவது எப்படி?' என்று விவாதித்து முடிவு கட்டுவோம்" என்று கூறினார்கள்.

ஆனால், பற்பல காரணங்களால், அத்தகைய கூட்டுப் பேச்சு வார்த்தை நடைபெறுமலேயே போய்விட்டது.

அத்தகைய கூட்டு முயற்சியை இனியாவது செய்யுமாறு இப்போது இங்கு வருகை புரிந்துள்ள கல்வி அமைச்சரைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களும் அவை மீது அரசு பிறப்பித்த 20—5—68 தேதி நினைவுக்குறிப்பு 87531/83/67 ஆணையும் இணைப்புகள் 1, 2 ல் முறையே கொடுக்கப் பட்டுள்ளன.

1-4-1964 முதல் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு இலவசமாக ஆக்கப் பட்டது.

அதற்கு முன்பு உயர்நிலைப் பள்ளிகளின் வருவாய் பின்வருமாறு;

(1) கட்டணச் சலுகை பெறக் கூடாத மாணவ, மாணவிகளிடம் வசூலிக்கும் கட்டணத் தொகை.

(2) கட்டணச் சலுகை காரணமாக ஏற்படும் இழப்புக்கு ஈடாக அரசு தரும் ஈட்டுத் தொகை

(3) ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகட்கு மேலாக அமுலில் இருந்த முறைப்படி வழங்கிய மானியத் தொகை.

(4) ஆசிரியர்களின் சம்பளம்போக, மற்றபடி உள்ள வாடகை, வரி, பழுதுபார்க்கும் செலவு, சில்லறைச் செலவுபோன்ற ஒத்துக் கொள்ளப்பட்ட இனங்களுக்குக் கிடைக்கும் மானியத் தொகை.

இத்தகைய பலதிறப்பட்ட வருவாய்களில் இருந்து, தனியார் உயர் நிலைப் பள்ளி நிருவாகத்தினர், உயர்நிலைப் பள்ளிகளைத் திறம்பட நடத்தியதோடன்றி, மீதப் பணத்தைச் சேர்த்துப் பல வகைகளில் உயர்நிலைப் பள்ளிகளை முன்னேற்றம் அடையச் செய்தனர்.

கட்டணமில்லாக் கல்வி முறை நடைமுறைக்கு வந்தபொழுது, தனியார் உயர்நிலைப் பள்ளி நிருவாகிகள் கழக உறுப்பினர்கள், அப் பொழுதிருந்த முதலமைச்சரை நேரில் கண்டு முறையிட்டனர். அப் போதிருந்த முதலமைச்சர் அவர்கள், ஆசிரியர்களின் சம்பளம் மட்டு மின்றி, வாடகை, வரி, பழுதுபார்த்தல், சில்லறைச் செலவு எல்லா வற்றையும் முழுவதாக உயர்நிலைப் பள்ளிகளுக்கு அளிப்பதாக உறுதி மொழி கூறினர்.

''உதவித் தொகையை அப்படிக் கணக்கிடுங்கால் பள்ளிக் கூடங் களை நிருவாகம் செய்வதற்காக நிருவாகிகள் பங்காக ரூ. 1,500/- இருக்கவேண்டும்'' என்றும், ''மொத்தச் செலவில், இந்த ரூ. 1,500/- ஐக் கழித்து மீதத்தைத் தருகிறோம்'' என்றும் கூறினர்கள். ஆனால், அப்படி

நடக்கவில்லை. "சாமி வரங்கொடுத்தும் பூசாரி வரம் கொடுப்பதில்லை" என்பது மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது.

'1945-ம் ஆண்டுக்குப்பின் தொடங்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டளைத் தொகை (Endowment) ரூ. 35,000 ஏற்படுத்த வேண்டும்' என்ற விதி உள்ளது. இந்த ரூ. 1,500 அந்தக் கட்டளைத்தில் இருந்து வரும் வட்டி போலும்! கட்டளைத் தொகை வட்டியை இப்படி ஈடு செய்யலாமா என்பது விவாதத்துக்கு உரியதாகும்.

மற்றும், 1945-ம் ஆண்டுக்கு முன்பு தொடங்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டளைத் தொகை (Endowment) சிறிது கூட கிடையாது. ஆகையால், இந்த ரூ. 1500/-ஐப் பழைய பள்ளிக்கூடங்கள் எப்படிக் கண்டுபிடிப்பது என்பது தெரியவில்லை.

இதுவன்றி, பள்ளிக்கூடம் ஒழுங்காக நடக்க நிருவாகத்தினர் செய்யும் இன்றியமையாத பல செலவினங்களைத் தேவையற்றவை என்று கல்வித் துறையினர் தள்ளி விடுவதால் பள்ளி நிருவாகத்தினர்க்கு அளவற்ற பொருள் இழப்பு ஏற்படுகின்றது. இலவசக் கல்வி முறை நடைமுறைக்கு வருவதற்கு முன்பு இருந்த விதிகளையே, கணக்குத் தணிக்கையாளர்கள் பின்பற்றி வருவதே இப்படித் தள்ளுவதற்குக் காரணமாகும்.

அவ்விதிகளின் படி, 1—4—1964க்கு முன்பு செலவினங்கள் பலவற்றைத் தள்ளுபடி செய்தால் கூடப் பள்ளி நிருவாகத்தினருக்குப் பணப் பற்றுக்குறை இருந்ததில்லை. கல்வி மானியத் தொகையைக் கணக்கிடுவதில் அப்பொழுது ஒரு விநோத முறை இருந்தது. அதாவது, ஏறிய சம்பள விகிதத்தில் நாங்கள் வசூலித்தாலும், உண்மையாகக் கிடைத்ததை வருவாய் என்று கொள்ளாமல் கல்வி விதிகளில் குறிப்பிட்டுள்ள குறைந்த சம்பள விகிதத்தில் வசூலித்தால் என்ன தொகை வருமோ, அதை மட்டும் தான் வரவு என்று கொண்டார்கள். அந்த வரவுக்கு மேல் ஏற்பட்ட செலவில் மூன்றில் இரண்டு பாகத்தை மானியமாக வழங்கி வந்தனர்.

இப்படிக் கணக்கிட்டதில், பெரிய பள்ளிகளுக்குக் கணிசமான தொகை ஆண்டு தோறும் மீதம் ஆயிற்று.

இப்படி மீத்து வைத்த பணத்தைக் கொண்டுதான் 1—4—1964க்குப் பின் பல இக்கட்டுகளுக்கிடையே பள்ளிக்கூடங்களை மூடிவிடாமல் நிருவாகிகளால் நடத்தி வர முடிகிறது. ஆனால், பல பள்ளிகளில், மீதம் இருந்த பணம் முழுவதும் செலவழிந்து, மேற்கொண்டு கடன் வாங்கியும் பள்ளிகளை நடத்தி வருகின்றனர்.

பல்லாண்டுகளாகப் பள்ளிகளை நல்ல முறையில் நடத்திவந்த பள்ளி நிருவாகிகளுக்கு இந்த நிலை மனவேதனையை அளிக்கிறது. "இவ்வளவு

தொல்லைகள் ஏன்? எங்களிடமே பள்ளி நிருவாகத்தை விட்டு விடுங்கள்'' என்ற வினு சில, 'நுண் மதியாளர்களால்' எழுப்பப்படுகின்றது. இதே மாதிரி அவர்களிடம் நாங்களும் சொல்லலாம். அது சரியன்று. ஆகவே இதை விதண்டாவாதக் கேள்வி என்று ஒதுக்கி விடுகிறேன்.

''தலை முறை தலைமுறையாக, எங்கள் முன்னோர்கள் நாட்டுக்கு நல்லது செய்ய அரும்பாடுபட்டுத் தொடங்கி வளர்த்த கல்விக் கூடங்களை, எங்கள் காலத்தில் கைகழுவிவிட்டோம்'' என்ற அவப் பெயரை ஏற்க எங்கள் மனம் ஒருப்படவில்லை. இவ்வவல நிலை மாருவிடில் பள்ளிகளை நாங்கள் தொடர்ந்து நடத்த இயலாத இழிநிலைதான் ஏற்படும்.

''இப்பொழுதுள்ள பள்ளிகளைத் தொடர்ந்து நடத்தாவிட்டால் என்ன நிலைமை ஏற்படும்?'' என்பதைச் சிந்தித்துப் பார்த்தல் நலம். அரசு அப்பள்ளிகளை எடுத்துக் கொள்ளலாம். ஆனாலும், அரசியல் அமைப்பு விதிகளின்படி பள்ளி நிருவாகத்தினர்க்கு ஏற்படும் இழப்புக்கு ஈட்டுத் தொகை கொடுத்தாக வேண்டும். அந்த ஈட்டுத் தொகை, ஒவ்வொரு பள்ளிக்கும் எத்தனை இலட்சங்கள் ஆகும்? அத்தொகைக்கு மிக மிகக் குறைந்த வட்டிவிகிதத்தில் நடைமுறைச் செலவுக்கு மான்யம் எங்களுக்குக் கொடுத்தால் கூட மிக நன்ருகப் பள்ளிகளை நாங்கள் நடத்த முடியுமே! இப்பள்ளிக் கட்டிடங்களுக்கு வாடகை கொடுப்பதென்ருல், ஒவ்வொரு பள்ளிக்கும் திங்கள் தோறும் எத்தனை ஆயிரம் ரூபாய் தர வேண்டி வரும் என்பதையும் நன்கு சிந்திக்க வேண்டுகிறேம்.

'தனியார் பள்ளி' என்றதுமே, 'ஏதோ பணம் சம்பாதிக்க நடத்துவது' என்ற ஒரு தவருன எண்ணம் 'சிலர்' இடையே இருந்து வருகிறது. இது சரியான எண்ணம் அன்று என்று மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். எத்துறையிலும் நல்லவர்கள் உண்டு; கெட்டவர்களும் உண்டு.

அடிக்கடி ''கல்விக்காக எத்தனை கோடி செலவிடப்படுகிறது? மேலும் அரசுக்குப் பணச் செலவு ஏற்படுத்துவது நியாயமா?'' என்று கேட்கிருர்கள். அப்படிச் சொல்வது ''யானை வாங்கப் பணமிருக்கிறது, சவுக்கு வாங்கப் பணமில்லை'' என்று சொல்வதைப் போல இருக்கிறது.

இதற்கு ஒரு எடுத்துக் காட்டு. மிகப் பல பள்ளிகளில், நூலகத்தில் உள்ள நூல்களின் எண்ணிக்கை பல ஆயிரக் கணக்கில் இருக்கிறது. ஆனல், 1—4—1964க்குப் பின் எவ்வளவு பெரிய பள்ளியானலும் நூலக அலுவலரை (Librarian) அமர்த்திக் கொள்வது அனுமதிக்கப்படவில்லை.

இதன் விளைவாகக் கடந்த 4, 5 ஆண்டுகளாக நூலகத்தில் உள்ள பல்லாயிரக்கணக்கான நூல்கள், பயன்படாமல் உறங்கிக் கொண்டிருக்கின்றன.

இது மட்டும் அன்று. தோட்டக்காரர், பெருக்குபவர், சுத்தம் செய்பவர். எழுத்தர், உதவியாளர், பணியாளர், குடிதண்ணீர் வழங்குபவர் எல்லோருமே குறைக்கப்பட்டு விட்டனர். இதில் எள்ளவும் நியாயம் இல்லை. இலவசக் கல்விக்கும், மல அறையைத் தூய்மைப் படுத்துவதற்குத் தோட்டியை (Sweeper) அமர்த்துவதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? இலவசக் கல்வி முறை வந்த பின் தண்ணீர்த் தாகம் எடுப்பது நின்றுவிடுமா? கல்வித் துறை நெறியாளர் 18—8—1951 தேதியிட்டு அனுப்பின ஆணை எண்: 185-டி-2/51 அனுமதித்த பணியாளர் விகிதம் பின்வருமாறு:—

உயர்நிலைப் பள்ளிகள்

	மாணவர் எண்ணிக்கை 500-ம் 500-க்கு கீழே	மாணவர் எண்ணிக்கை 500-க்கு மேல் 1000-க்கு கீழே	மாணவர் எண்ணிக்கை 1000-க்கு மேல் 1500க்கு கீழே	மாணவர் எண்ணிக்கை 1500-க்கு மேல்
எழுத்தர்கள்	1	2	3	4
நூலகர்	—	1	1	1
அலுவலக உதவியாளர்	1	1	1	1
நூலக உதவியாளர்	1	—	1	1
ஆய்வுக்கூட உதவியாளர்	1	2	2	2
பணியாள்	1	2	2	3
காவல்காரன்	1	1	2	2
தண்ணீர் கொடுப்பவர்	1	1	2	2
தோட்டக்காரன்- பெருக்குநர்			1	2
	1	1	—	—
தோட்டக்காரன்	—	—	1	1
பெருக்குநர்	—	—	1	1
தோட்டி (பகுதி நேர ஊழியன்)	1	—	—	—
தோட்டி	—	1	1	1

இதை மாற்றிக் கல்வித் துறையினர் 1—6—'65 தேதியில் 79694-42/65 குறிப்பில் அனுமதித்த பணியாளர் விகிதம் பின்வருமாறு:

உயர்நிலைப் பள்ளிகள்

	மாணவர்கள் எண்ணிக்கை 500-ம் 500-க்கு கீழே	மாணவர்கள் எண்ணிக்கை 500-க்கு மேல் 1500ம் 1500-க்கு கீழே	மாணவர்கள் எண்ணிக்கை 1500க்கு மேல்
எழுத்தர்	இல்லை	ஒன்று 1	இரண்டு 2
அலுவலக உதவியாளர்	ஒன்று 1	ஒன்று 1	ஒன்று 1
பணியாளர்	ஒன்று 1	இரண்டு 2	மூன்று 3
காவல்காரன்	ஒன்று 1	ஒன்று 1	ஒன்று 1
பெருக்குநர்	ஒன்று 1 (பகுதி நேர ஊழியன்)	ஒன்று 1 (பகுதி நேர ஊழியன்)	ஒன்று 1 (பகுதி நேர ஊழியன்)
தோட்டி	ஒன்று 1 (பகுதி நேர ஊழியன்)	ஒன்று 1 (பகுதி நேர ஊழியன்)	ஒன்று 1 (பகுதி நேர ஊழியன்)

இப்படிக் குறைத்து விட்டதால், அன்றாடப் பள்ளி வாழ்க்கை பெருமளவு பாதிக்கப்பட்டு விட்டது. பூசணிக்காய் போவது தெரியாமல், சுண்டைக்காயைக் கணக்கிடுவதில், ஆர்வம் காட்டுகிறார்கள் கல்வித் துறையினர். முன்பு அனுமதிக்கப்பட்ட பணியாளர்களை அப்படியே அனுமதிக்கும்படி கல்வித்தரம் குறையாதிருக்கும் பொருட்டு, மன்றாடிக் கேட்டுக்கொள்கிறோம். சம்பள வசூல் இப்பொழுதில்லை என்பதற்காக ஒரு எழுத்தரைக் குறைப்பது நியாயமானதே. இதைமட்டும் குறைத்து பழைய விதிகளை அமுல் செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டுகிறோம்.

தற்போதுள்ள எழுத்தர்கள், உதவியாளர்கள், பணியாட்கள் ஆகியோர் தொடர்ந்து இருக்கலாமென்றும், ஏதேனும் காலி ஏற்பட்டால், 1964-ம் ஆண்டில் பிறப்பித்த உத்திரவுப்படி காலியிடத்தை நிரப்பக்கூடாதென்றும் ஒரு விதி இருப்பதால், வேலை செய்யாதவர்களையும், தவறு செய்பவர்களையும் வேலையிலிருந்து நீக்காமல் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. பெருந்தவறிழைத்தால்கூட வேலையி

விருந்து நீக்கி விட்டால், இடம் காலியாகவே போய்விடுமே என்ற நிலையில் எதையும் பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

தாங்கொணாத் துயர் தரும் பண நெருக்கடி தீர, இக்கழகத்தின் செயற் குழு, 1966 ஏப்ரல் திங்கள் 2-ம் நாள், இப்பிரச்சினையைப் பல கோணங்களிலும் அணுகி, அரசின் நிதி நெருக்கடியையும் உணர்ந்து, கீழ்க் கண்ட தீர்மானங்களை நிறைவேற்றி, அரசுக்கு அனுப்பிவைத்தது. அஃதாவது :-

தொடக்கப் பள்ளிகளுக்குத் தருவது போல், ஆசிரியர் சம்பளப் பட்டித் தொகையில் 10%-ஐ நிருவாக நடைமுறைச் செலவுக்கு மானியமாக வழங்க அரசினருக்கு வேண்டுகோள் விடுத்தல்.

அல்லது,

ஒவ்வோர் ஆண்டிலும், ஆகஸ்டுத் திங்கள் முதல் நாள் இருக்கும் மாணவர் தொகை பேரில், மாணவன் ஒருவனுக்கு ரூ. 10 வீதம் நிருவாக நடைமுறைச் செலவுக்கு மானியமாக அளிக்க அரசினருக்கு வேண்டுகோள் விடுத்தல்.

அல்லது

'வசதிக் கட்டணம்' என்று ஒவ்வொரு மாணவனிடம் இருந்தும் ரூ. 10 வீதம் வசூலித்துக் கொள்ளத் தனியார் பள்ளி நிருவாகத்தினருக்கு அனுமதி வழங்க அரசினருக்கு வேண்டுகோள் விடுத்தல்.

இவ்வாறு, இக்கழகத்தின் செயற் குழு தீர்மானித்து, அரசினர்க்கும் அனுப்பி வைத்தது.

1966 ஆகஸ்டு 6-ம் நாள், இதற்காக ஓர் 'உறுப்பினர் குழு'வும் முதலமைச்சரை நேரில் கண்டு, இதே வேண்டுகோளை வற்புறுத்தி முறையிட்டுக் கொண்டது.

கடந்த மாநாடு கூடுவதற்கு ஒரு திங்கள் முன்பு அதாவது 1967-'மே' திங்களில் தனியார் பள்ளி நிருவாகத்தினர் தனித்தனியாக ஒவ்வொரு மாணவனிடம் இருந்தும் ரூ. 10 வசூலித்துக் கொள்ள அனுமதி தருமாறு அரசினருக்கு விண்ணப்பம் அனுப்பினார்கள். இன்று வரை எதற்கும் யாதொரு பதிலும் கிடைக்கவில்லை.

இது நிற்க, மாநிலக் கல்வி அறிவுரைக் கழகம் (State Education Advisory Board) 1967 ஆண்டு மே திங்களில் நடந்த அதன் முதல் கூட்டத்தில் தனியார் பள்ளிகளின் வசதிக்காக, ஒவ்வொரு மாணவனிடம் இருந்தும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 வீதம் வசூலித்துக் கொள்ளலாம் என்றும், ஆனால், அதன் காரணமாகத் தனிக்கட்டணங்களுக்காக ஏற்கெனவே விதித்துள்ள மொத்த உச்ச வரம்புக்கு மேல் போகக் கூடாது என்றும் பரிந்துரை வழங்கி உள்ளது. ஆலோசனைக் (Consultative Committee) குழு இதைப் பரிசீலிக்க இருக்கிறது. இந்தக் கூட்டத்தில் நிறைவேறும் தீர்மானங்கள் மீது முடிவாக உத்தரவு பிறப்பிக்கும் வரை தற்காலிகமாக அறிவுரைக் கழகத்தின் பரிந்துரைமீது அரசு ஆணை உடனடியாகப் பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

விடுப்பு விதிகள் எழுத்தர்களுக்கும், ஏனைய சிப்பந்திகளுக்கும் அரசாங்கத்தில், அல்லது. உள்ளாட்சி மன்றங்களில் உள்ளது போல் அமையவும் கல்விக் கூடங்களில் பணி புரியும் எழுத்தர்களுக்கும் ஏனைய சிப்பந்திகளுக்கும் ஆசிரியர்களுக்குரிய சலுகைகள் வழங்கவும் அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர்களுக்கும், நிருவாகிகளுக்கும் இடையே ஏற்படும் ஒப்பந்தத்தில் 10வது விதியில் ஒரு குறிப்பு சேர்க்கப்பட்டுள்ளது. அதாவது, “ஆசிரியரை நீக்கி உத்தரவு இட்டாலும், ஆசிரியர்மேல் முறையீடு அனுப்பினால். அந்த மேல் முறையீட்டின்மேல் உத்தரவு பிறப்பிக்கும் வரை அவரை வேலையிலிருந்து நீக்கக் கூடாது” என்பதாகும்.

‘எந்த வித உத்தரவு வரும்?’ என்று தெரியாத ஆசிரியர் சரியாக வேலைசெய்வதும் இல்லை. கட்டுப்பாடு போய்விடுகிறது. நிருவாகத்தினரிடம் அசட்டை ஏற்படுகிறது. மற்ற ஆசிரியர்களுக்கும் இது பரவுகிறது. இதை மாற்ற வேண்டும். மேல் முறையீடுகள் மீது உத்தரவு பிறப்பிக்க ஒரு கால வரையறையாவது ஏற்படுத்தவேண்டும். ஆண்டுக் கணக்கில் பல நிலைகளில் யாதொரு முடிவும் ஏற்படாது பல முறையீடுகள் இன்னமும் கிடக்கின்றன.

“எந்தச் சட்டம் வந்தாலும், சட்டம் வரும்போது உள்ள ஊதியம் யாருக்கும் குறையாது” என்பது விதி. ஆனால், 1—4—1964-ல் வந்த இலவசக் கல்வித் திட்டம், சில எழுத்தர்களையும், பணியாளர்களையும் பாதித்துள்ளது. அவர்கள் அதற்கு முன் வாங்கி வந்த ஊதியம் குறைக்

கப்பட்டு விட்டது. புதிதாக வருபவர்களுக்குப் புது விதி நடைமுறைக்கு வருவது நியாயமானது. அல்லது, பழைய ஆட்களுக்கே மேற்கொண்டு ஊதிய உயர்வு கொடுக்கக் கூடாது என விடுதலும் நியாயமாகும். ஆனால், வாங்கி வந்த பணத்தையே குறைப்பது என்பது நியாயம் அற்றது.

முடிவாக நாங்கள் வேண்டுவது :

(1) பணமுடை வேதனையை நீக்குதல்.

(அ) செலவினங்கள் எல்லாவற்றையும் ஒத்துக்கொள்ளுதல்.

அல்லது

(ஆ) தொடக்கப் பள்ளிகளுக்குத் தருவது போல் ஆசிரியர் சம்பளத் தொகைகளில் 10./° நிருவாக நடைமுறைச் செலவுக்கு மானியம் வழங்குதல்.

அல்லது

(இ) ஒவ்வொரு மாணவனுக்கும் ரூ. 10 வீதம் மான்யம் வழங்குதல்.

அல்லது

(ஈ) பருவம் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் (ஆண்டுக்கு ரூ. 10) ஒவ்வொரு மாணவனிடம் இருந்தும் நிருவாக நடைமுறைச் செலவுக் கட்டணமாக வசூலித்துக் கொள்ளப் பள்ளி நிருவாகத்தினருக்கு அனுமதி அளித்திடுதல்.

(2) எழுத்தர்களுக்கும், ஏனைய சிப்பந்திகளுக்கும் 1—4—1964-ல் வாங்கி வந்த சம்பளத்தில் குறைத்ததை நீக்கிவிடுதல்.

(3) 31—3—1964-க்கு முன்பு இருந்த விகிதப்படி, எழுத்தர்களையும், இதர சிப்பந்திகளையும் வைத்துக் கொள்ள (ஒரே ஓர் எழுத்தரை மட்டும் குறைத்து) அனுமதித்தல்.

(4) ஆசிரியர்களுக்கும், நிருவாகிகளுக்கும் இடையே ஏற்படுத்திக் கொள்ளும் உடன்படிக்கையில் விதி 10-ல் சேர்த்த குறிப்பை நீக்கி விடுதல்.

(5) உள்ளாட்சி மன்ற ஊழியர்கள், அரசு ஊழியர்கள் ஆகியோருக்கு நடைமுறையில் இருக்கும் விடுப்பு விதிகளைத் தனியார் பள்ளி எழுத்தர்களுக்கும், ஏனைய சிப்பந்திகளுக்கும் செயல் படுத்தல்.

(6) எழுத்தர்களுக்கும், ஏனைய சிப்பந்திகளுக்கும் ஆசிரியர்களுக்கு உரிய ஓய்வு கால ஊதியம், பிள்ளைகளுக்குக் கட்டணம் செலுத்தாச் சலுகை போன்ற எல்லாச் சலுகைகளையும் வழங்கிடுதல்.

(7) எந்தெந்த இனங்கள் நிர்வாக மானியக் கணக்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றன, எந்தெந்த அளவு வரை உதவி கிடைக்கும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டு ஆணை பிறப்பித்தல்.

(8) கணக்குத் தணிக்கையாளர் எப்படிக் கணக்கிட்டு நிர்வாக மானிய தொகையை நிர்ணயிக்கிறார் என்பதைத் தெளிவுபடுத்தல்.

இவ்வறிக்கையை முடிக்கு முன், மறைந்த மாணிக்கம், அறிஞர் அண்ணா அவர்களின் மறைவு நமக்குப் பேரிழப்பாகிவிட்டது என்பதை ஆற்றொணாத் துயரத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். 28—10—1967 அன்று டாக்டர் குருசுவாமி முதலியார் தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் உயர்நிலைப் பள்ளியில் புதிதாகக் கட்டப்பட்ட குழந்தைவேலு முதலியார் கூடத்தைத் திறந்துவைக்கையில் அறிஞர் அவர்கள். "பணமுடைதீர நீங்கள் குறிப்பிட்டுள்ள நான்கு மாற்று வழிகள். உங்கள் கழக உறுப்பினர் அனைவருக்கும் ஏற்புடையன என்றால், அவற்றுள் ஒன்றுக்கு அரசு ஆணை பிறப்பிக்கிறேன்" என உறுதியளித்தார்கள். ஆனால், அவ்வுறுதியை நிறைவேற்றுவதற்குள், எங்கள் தீவினைப் பயனால் அவர்கள் அமரர் ஆகிவிட்டார்கள்! என் செய்வோம்! அவர் வழி நிற்கும் அமைச்சர் பெருமான், அண்ணா வார்த்தைக்குப் பழுது நேராத வகையில். அரசு ஆணை பிறப்பிக்க, ஆவன செய்வார் என நம்பிச் 'செய்ய வேண்டும்' என விரும்பி, வேண்டிக் கேட்டுக் கொண்டு, இவ்வறிக்கையை முடிக்கிறேன்.

வணக்கம்.

கி. இல. பழநிசுவாமி,

செயலாளர்.

Phone : 24544 Post Box No. 1818

Association Publishing House

'ஆரம்பக் கல்வி' நிலையம்

94/95, New Street, Mannady, Madras-1.

ஆரம்பப் பள்ளிகளுக்குரிய எமது பாடப் புத்தகங்கள்

இரண்டாம் வகுப்பு

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
சிறுவர் வரலாறு	*0·50*	—	—
சிறுவர் பூகோளம்	*0·60*	—	—
சிறுவர் கணக்கு நூல்	*0·75*	—	—
இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்	*0·40*	—	

மூன்றாம் வகுப்பு

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
சிறுவர் வரலாறு	*0·60*	—	—
சிறுவர் பூகோளம்	*0·60*	—	—
சிறுவர் கணக்கு நூல்	*0·87*	*37*	*18—5—66*
இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்	*0·50*	—	—

(3-வது பூகோளம் ஜில்லாவாரியாக் வெளியிட்டிருக்கிறோம்.)

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
நான்காம் வகுப்பு			
சிறுவர் வரலாறு	0·87	11	18—5—66
சிறுவர் பூகோளம்	0·62	18	19—5—66
சிறுவர் கணக்கு நூல்	1·25	3	24—5—67
இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்	0·75	6	18—5—66

(4-வது பூகோளம், சரித்திரம் ஜில்லாவாரியாக வெளியிட்டிருக்கிறோம்.)

ஐந்தாம் வகுப்பு

சிறுவர் வரலாறு	1·00	42	18—5—66
சிறுவர் பூகோளம்	1·00	19	18—5—66
சிறுவர் கணக்கு நூல்	1·50	4	17—5—67
சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்	1·25	9	18—5—66

உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்குரிய எமது பாடப் புத்தகங்கள்

ஆறும் வகுப்பு

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
மாணவர் வரலாறு	1·00	54	18—5—66
புதுமுறை நில நூல்	2·00	13	24—4—68

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
புதுமுறை சங்கக் கணிதம்	1·50	50	18—5—66
பொது விஞ்ஞானம்	1·25	25	18—5—66
அறிவுச்சுடர் (தமிழ் துணைப்பாட நூல்)	0·62	22	18—5—66
Mother India Supplementary Reader (ஆங்கிலத் துணைப்பாட நூல்)	0·50	49	18—5—66

ஏழாம் வகுப்பு

புதுமுறை வரலாறு	1·50	18	17—5—67
புதுமுறை நில நூல்	1·50	4	24—5—67
புதுமுறை சங்கக் கணிதம்	1·75	4	24—5—67
பொது விஞ்ஞானம்	1·50	15	17—5—67
மேனாட்டு இளைஞர் (தமிழ்த் துணைப்பாட நூல்)	1·00	7	17—5—67
Mother India Supplementary Reader (ஆங்கிலத் துணைப்பாட நூல்)	0·60	9	17—5—67

எட்டாம் வகுப்பு

புதுமுறை வரலாறு	1·80	36	17—5—67
புதுமுறை நில நூல்	1·80	40	17—5—67

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
புதுமுறை சங்கக் கணிதம்	2·00	4	24—5—67
பொது விஞ்ஞானம்	2·00	4	24—5—67
நம் நாட்டு இளைஞர் தமிழ்த் துணைப்பாட நூல்	1·00	7	24—4—68

கணிதம் கற்பிக்கும் முறை

ஆசிரியர் : லீலா. பார்த்தசாரதி, பி.ஏ., எல்.டி.,

2·00	2	5-7-'61

(ஆசிரியர்களுக்குத் தக்க கமிஷன் உண்டு.)

Association English Primer III Class 0·60
Association English guide IV Class 0·40
Association English guide V Class 0·50

புதுமுறை சங்க வாய்பாடு

100 பிரதிகள் 9·00

HIGH SCHOOLS

உயர்நிலைப் பள்ளிகளுக்கு

GENERAL SCIENCE

பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : பி. வி. நாகராஜன், பி.ஏ., எல்.டி.

ஒன்பதாம் வகுப்பு	1·75	33	18-5-'66

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
பத்தாம் வகுப்பு	2·00	56	17-5-'67
பதினோராம் வகுப்பு	2·80	23	24-4-'68

MATHEMATICS

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் : **பி. வி. நாகராஜன்,** பி.ஏ., எல்.டி..

பத்தாம் வகுப்பு	2·50	6	24-5-'67

புதுமுறை நிலநூல்

ஆசிரியர் : **R. பத்மநாபன்,** எம்.ஏ., பி.டி.,

ஒன்பதாம் வகுப்பு	2·00	33	7-5-'69
பத்தாம் வகுப்பு	2·50	60	17-5-'67
பதினோராம் வகுப்பு	3·00	28	24-4-'68

புதுமுறை வரலாறு

ஆசிரியர் : **வி. எஸ். இராகவன்,** பி.ஏ., பி.டி.,

ஒன்பதாம் வகுப்பு	2·00	33	7-5-'69
பத்தாம் வகுப்பு	2·00	59	17-5-'67
பதினோராம் வகுப்பு	2·50	24	24-4-'68

திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஆசிரியர்கள் : **த. சே. உமாபதி,** எம்.ஏ., எல்.டி.,
புலவர் **தணிகை உலகநாதன்**

பத்தாம் வகுப்பு	2·25	45	17-5-'67

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி

TAMIL GRAMMER

இலக்கணம், கட்டுரை, மொழிப் பயிற்சி

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனார்

ஒன்பதாம் வகுப்பு	*2·00*	*28*	*7-5-'69*
பத்தாம் வகுப்பு	*2 00*	*5*	*24-5-'67*
பதினோராம் வகுப்பு	*2·00*	*20*	*25-4-'68*

தமிழ்த் துணைப்பாட நூல்

உரிமைக் குரல்

ஆசிரியர் : **வித்துவான் வே. வேதாசலம்**

ஒன்பதாம் வகுப்பு	*1·25*	*28*	*7-5-'69*

மருத்துவ மேதைகள்

ஆசிரியர் : **வித்துவான் வே. வேதாசலம்**

பதிப்பாசிரியர் : புலவர். **தணிகை உலகநாதன்**

பத்தாம் வகுப்பு	*1·25*	*49*	*17-5-'67*

உமாபதி உரைநூல்

மூன்றாம் வகுப்பு	*0·45*	—	—
நான்காம் வகுப்பு	*0·55*	—	—
ஐந்தாம் வகுப்பு	*0·65*	—	—
ஆறாம் வகுப்பு	*1·00*	—	—
ஏழாம் வகுப்பு	*1·25*	—	—

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்,

(*ஆரம்பக்கல்வி நிலையம்*)

94/95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை-1.

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.